கிராம நலம்

அக்டோபர் 1960 . . . 13 ந.பை.

சென்னை மாநிலத்தில் காந்தி ஜயந்தி (2-10-60) தினத்தில் 75 வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்

அடிகளாரின் அடிச்சுவட்டில்

மகாத்மாவுக்கு அஞ்சலி

—

நமது மாநிலத்தில், காந்தி ஜயந்தி (2—10—60) தினத்தில், 75 வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் மலர்கின்றன.

மகாத்மாவின் கனவு நனவு ஆகத் தொடங்கியிருக்கும் இந்த நன்னாளில், பொதுநல ஆர்வமும், ஒற்றுமை உணர்வும், மக்களிடையே மேன்மேலும் ஓங்கி, வளருமாறு பாடுபட உறுதிகொள்வோமாக !

Y31m211,N55
31K0

'கிராம நல' இதழ்
ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி,
ஐ.சி.எஸ்.,
மாநில அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி
மாநில இணை அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை
துணைக் காரியதரிசி [பஞ்சாயத்து]

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [பயிற்சி]

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [திட்டம்]

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி

"கிராம நலம்" பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் "ஆசிரியர், "கிராம நலம்", கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கிராம நலம்—சந்தா விவரம்

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் "கிராம நலம்" பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் 'பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9' என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கிராம நலம்

"கிராமங்கள் வாழ, கிராமப் பொருள் ஓங்க
திட்டங்கள் மேற்கொள்வோம் சேர்ந்து."

—காந்தி மணிக்குறள்.

மலர் 6 | அக்டோபர் 1960 | இதழ் 1

பொருளடக்கம்

	பக்கம்.
வாழ்க நீ எம்மான்	2
சமுதாய நலத் திட்டம்—ஜவஹர்லால் நேரு	3
ஊக்கத்துடன் உழைப்போம்—முதலமைச்சர் சொற்பொழிவு	4
கல்யாணகுப்பம் காட்டும் வழி—திரு பி. கணபதி	7
வாழ்விலே மகிழ்ச்சி பொங்க—திரு பொ. திருகூடசுந்தரம், எம்.ஏ., பி.எல்.,..	11
நமது காணிக்கை	14
கிராம நலனில் ஒரு புதிய திருப்பம்—திரு கே. பி. முத்துசாமி	21
குடும்பக் கட்டுப்பாடு—அரசாங்க ஆணையின் சுருக்கம்	23
இந்தியாவின் இதய ஒலி—எச். டி. மாளவியா	25
கிராமப் பஞ்சாயத்து தொகு நிதி	28
"கிராம நலம்" ஐந்தாண்டு நிறைவு விழா—(ஆசிரியர் கடிதம்)..	35
கிராம நலத்தை உயர்த்திடுவோம்—கவிஞர் சு. மு. சொக்கலிங்கம்	36

காந்தி ஜயந்தியை முன்னிட்டு, இந்த மலரில் மகாத்மாவின் பொன்மொழி களில் சிலவற்றை எடுத்து, ஆங்காங்கே வெளியிட்டுள்ளோம்.

ஆசிரியர்,
"கிராம நலம்."

வையகம் வாழ வழிவகுக்கும் காந்தி நெறி:

வாழ்க நீ எம்மான்

அமெரிக்காவில் காந்திய நெறியின் வெற்றி முழக்கம்

அமெரிக்காவில், தெற்கு ராஜ்யங்கள், நிறவெறிக் கொள்கைக்கு அதி தீவிர ஆதரவளித்தும், இனப்பாரபட்ச முறையை அனுசரித்தும் வந்துள்ளன. வெள்ளையர்களின் மனத்திலே, கருப்பர்களின் அவல நிலை கண்டு, எந்த விதமான இரக்க உணர்ச்சியும் உண்டானதில்லை. அந்த ராஜ்யங்களில், நிறவெறி பயங்கரமாக தலைவிரித்தாடியது. ஆனால், சமீபத்தில் கிடைத்துள்ள பத்திரிகைச் செய்திகளிலிருந்து, அமெரிக்காவில் மகாத்மா காந்தியடிகளின் சாத்வீக சத்யாக்கிரஹ முறை மற்றொரு மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது என்று தெரிகிறது. தெற்கத்திய ராஜ்யங்களில் உள்ள எட்டு நகரங்களில் கறுப்பர்கள் உணவு விடுதிகளில் வெள்ளையர்களுடன் சமமாக உட்கார்ந்து சாப்பிட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நல்ல மனமாற்றம்

உண்மையிலே வெள்ளையர்களிடையே ஒரு நல்ல மனமாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதற்கான அறிகுறி காணப்பட்டுள்ளது. ஏனென்றால், கறுப்பர்கள் உணவு விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட இடங்கள் வெள்ளையர்களால் பகிஷ்காரம் செய்யப்படவில்லை. எந்த விதமான பலாத்கார நிகழ்ச்சிகளும் சம்பவிக்கவில்லை. அதே மாதிரி கறுப்பர்களும் தங்களுடைய வெற்றியைப்பற்றி பகிரங்கமாக தம்பட்டம் அடித்துக்கொள்ளாமல், வெள்ளையர்களுக்கு மனவேதனை உண்டு பண்ணாத வகையில் நடந்து கொண்டார்கள். வெள்ளையர்கள் பலாத்காரத்தை உபயோகித்த பொழுதுகூட, சத்தியாக்கிரஹத்தில் ஈடுபட்ட கறுப்பு மாணவர்கள் சகிப்புத்தன்மையுடன் அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு, சாத்வீக சத்தியாக்கிரஹ முறைக்கு ஊறு நேரிடாவகையில் நடந்து கொண்டார்கள். அவர்களுக்கு உணவு விடுதிகளில் உணவு பரிமாற மறுதளிக்கப்பட்ட பொழுது அமைதியாக இருந்த இடத்திலே இருந்து சாத்வீக சத்தியாக்கிரஹம் செய்தார்கள். அமெரிக்க அரசியல் சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமத்துவம் தங்களுக்கும் வழங்கப்படல் வேண்டும் என்று ஆண்டவனை நோக்கி வேண்டிக்கொண்டார்கள்.

கறுப்பர்கள் அனுமதிக்கப்பட்ட உணவு விடுதிகளில் வருமானம் குறைந்து விடவில்லையென்றும், வெள்ளையர்கள் அப்படி அவர்கள் அனுமதிக்கப்பட்டதை தடுக்கவில்லையென்றும் கூறப்படுகிறது. கறுப்பர்களின் சாத்வீகப் போராட்டம் அவர்களின் மனத்தை உருக்கி விட்டது போலும்!

அன்பப் போராட்டத்தின் அற்புத சாதனை

ஆனால் எத்தனையோ மகத்தான தியாகங்களைப் புரிந்த பிறகுதான் இந்த வெற்றி கிடைத்தது. சத்தியாக்கிரஹம் செய்த மாணவர்களின் மீது அடக்குமுறை அவிழ்த்து விடப்பட்டது. கடுமையான அடக்கு முறைகள் கையாளப்பட்டன. ஆனால் பூஜ்யர் மார்டின் லூதர் கிங் தலைமையில் கறுப்பு மாணவர்கள் போராட்டத்தை சாத்வீகமான முறையில் மிகவும் மன உறுதியுடன் கடைசிவரை நடத்தி வெற்றி பெற்றார்கள். “கறுப்பு காந்தி” என்று அன்புடன் அழைக்கப்படும் பூஜ்யர் மார்டின் லூதர் கிங் அவர்கள் (இவர் இந்தியாவிற்கு 1959-ல் வந்திருந்தார். வினோபாஜியையும் சந்தித்துப் பேசினார்) இந்த சாத்வீகப் போராட்டத்தைப் பற்றி பின் வருமாறு குறிப்பிடுகிறார்: “இந்த சத்தியாக்கிரஹம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. மனிதனின் மதிப்பையும், சுதந்திர உணர்ச்சியையும் பாதுகாக்க வேண்டி தொடுக்கப்பட்ட போராட்டங்களில், இவ்வளவு அதிகமாக மாணவர்கள், அமெரிக்காவிலேயே, இப்பொழுது கலந்து கொண்டதைப்போல், பெருவாரியான முறையில் எப்பொழுதுமே கலந்து கொண்டதில்லை”.

காந்தியம் வாழ்க! காந்திய நெறி வெல்க!!

(உபயம் “Bhoodan”)

“லட்சியத்துக்காக துன்பத்தை ஏற்றுக்கொள்பவர்கள் தங்களையும் மனித ஜாதியையும் உயர்த்திக் கொள்கிறார்கள்.”

"சேவையே தலைசிறந்த மதமாகும்."

சமுதாய நலத் திட்டம்

"சமுதாய நல அபிவிருத்தித் திட்ட வேலையில் ஆரம்பத்தில் இருந்த முன்னேற்ற வேகம் சற்றுக் குறைந்துவிட்டது. அந்தத் துறையில், அரசாங்கத்தின் சாயல் சற்று அதிகமாகப் பட்டுவிட்டதுதான் இதற்குக் காரணம். பஞ்சாயத்து ஆட்சி இதைத் தவிர்க்கவே துவக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்து ஆட்சி பற்றி நமக்கு அனுபவம் அவ்வளவு அதிகமாக இல்லைதான். பொறுப்புகளை பஞ்சாயத்து ஸ்தாபனங்களிடம் ஒப்படைத்து, அதை அவைகள் நிறைவேற்ற வேண்டிய வசதிகளும், அதிகாரங்களும் அவைகளுக்கு அளிக்கப்படுவதுதான் இதன் முக்கிய சாரமாகும். அதிகாரம் நல்ல முறையிலும் பயன்படுத்தப்படலாம். உருப்படாத வழியிலும் போகலாம். எந்த வழியிலும் செல்லும் உரிமை அளிக்கப்படும் பொழுதுதான், நல்லது செய்ய நல்ல முறையில் தூண்ட அந்தச் சூழ்நிலை பயன்படும்.

மகத்தான புரட்சி

நமக்குள்ள குறைந்த அனுபவத்தைக் கொண்டு சொல்லப்போனால், இந்தப் புதியப் பஞ்சாயத்து ஆட்சி முறை நம்முடைய பாரத நாட்டில் நடைபெறுகின்ற மகத்தான, அர்த்தம் பொதிந்த புரட்சியென்று சொல்லலாம். நமது சமுதாயத்தையே அது மாற்றி அமைக்கும். கிராமப் புறங்களில் பஞ்சாயத்து நிறுவனங்கள் அமைவது ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும். இந்த விழிப்புணர்ச்சி நம்முடைய சமுதாயத்திலே மகத்தானதொரு மாறுதலை உண்டாக்கும். இந்தியாவிற்கு வருகிற வெளிநாட்டுக்காரர்கள் இந்திய விவசாயி சமூகத்தினிடையே ஏற்பட்டுள்ள புதிய விழிப்புணர்ச்சியைக் கண்டு பிரமித்துப் போய்விடுகிறார்கள். ரசாயன உரம், பொறுக்கு விதைகள், புதிய கருவிகளை உபயோகித்தல் இவைகளை இந்திய விவசாயி ஏற்றுக்கொண்டதல்ல முக்கியம். புதியக் கருத்துக்களை அவன் ஏற்றுக்கொண்டு, அவைகளைப் புரிந்துகொண்டு செயலாற்றும் மறுமலர்ச்சி உணர்வு அவனிடையே ஏற்பட்டுள்ளதே, அதுதான் முக்கியம்.

சோர்வுக்கே இடமில்லை

கடந்த பத்தாண்டுகளைப் பின் நோக்கிப் பார்க்கும் பொழுது, நான் சில சமயங்களில் சோர்வடைவதுண்டு. திட்ட வேலையில் சம்பந்தமே இல்லாத சக்திகள் திட்ட வேலையைப் பாதிக்கும்பொழுது எனக்கு உண்மையிலேயே மனச்சஞ்சலம் ஏற்படுவதுண்டு. மாகாண, சாதி, மொழிச் சண்டைகள் போன்ற அழிவுச் சக்திகள் திட்ட வேலைகளின் அபிவிருத்தியைப் பாதிக்கும் வகையில் இருப்பதைப் பார்த்தால், நம் மனத்திற்கு ஒரு சோர்வு ஏற்படத்தான் செய்கிறது. திட்டமிட்டு செயலாற்றல், எல்லோரும் சேர்ந்து பணியாற்ற வேண்டிய ஒரு பணியாகும். நாட்டில் நிலவும் ஒற்றுமை உணர்வின் பேரில்தான் இந்த வேலை சுமுகமாக நடக்க வழியுண்டு. ஆகவே, இப்படிப்பட்ட ஒற்றுமையின்மையைப் பார்க்கும்பொழுது, நான் எவ்வளவோ மனக் கவலையையும், சோர்வையும் அடைந்துள்ளேன். இருந்தாலும், கடந்த பத்தாண்டுகளைத் திரும்பிப் பார்க்கும்பொழுது, எவ்வளவோ தவறுகள், குறைபாடுகள், தடுமாற்றங்கள் இருந்தாலும், அவை அத்தனையும் மீறிக்கொண்டு, இந்தியா முன்னேற்றப் பாதையில் வெகுவாக முன்னேறியிருப்பதைப் பார்க்கும் பொழுது, யாருக்கும் எந்த விதமான மனச் சோர்வோ, மன விரக்தியோ ஏற்படுவதற்கே காரணம் இல்லை."

—ஜவஹர்லால் நேரு

தமிழனின் பொற்காலம்....

"திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பழங்காலத்து முடியாட்சி ஒரு பக்கம் மதுரை, புகார், வஞ்சி முதலான பெரு நகரங்களில் விளங்க, மற்றொரு பக்கம் குடியாட்சி ஊர்தோறும் மன்றங்களில் விளங்கியிருந்தது. பெரு நகரங்களில் வேந்தர்கள் ஆண்டு வந்த போதிலும், நாடு முழுவதும் அவன் ஆணைக்கு உட்பட்ட ஊர் மன்றங்கள் (பஞ்சாயத்துக்கள்) இருந்து வந்தன. அந்த ஊர் மன்றங்களுக்கும், வேந்தர்களுக்கும் நேர்த் தொடர்பு ஒன்றும் இல்லை. வேந்தர்களின் கொடிகள் மன்றங்களில் பறக்கும். வேந்தர்களின் பெயர்கள் மக்கள் உள்ளத்தில் வாழும். அவ்வளவே அல்லாமல், அந்தந்த ஊரை உரிமையோடு ஆண்டுவந்தவை அந்தந்த ஊர்மன்றங்களே.

ஊர் மன்றங்களை அமைக்கும் உரிமையும் அந்தந்த ஊர் மக்களையே சார்ந்திருந்தது. ஊரின் காவல், வழக்கு, விழா, வரி முதலிய எல்லாவற்றையும் அந்தந்த மன்றத்தாரே கவனித்து ஆண்டு வந்தார்கள்."

—டாக்டர் மு. வரதராசனார்

('திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்ற நூலிலிருந்து.)

"எந்த நல்ல காரியமும் வெற்றிபெற வேண்டுமானால்,
தியாக உணர்ச்சியும் அர்ப்பணம்செய்யும் புத்தியும் தேவையாகும்."

ஊக்கத்துடன் உழைப்போம்

[2-10-60-ல் நமது மாநிலத்தில், 75 வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் செயல்படப் போகின்றன. அது சம்பந்தமாக கலந்தாலோசிக்க கலெக்டர்கள் மகாநாடு செப்டம்பர் 5, 6 தேதிகளில், சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்றது. அவ்வமயம் முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்களும், உள்நாட்டுத்துறை அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்களும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்கள். அவர்களுடைய பேச்சுக்களின் சுருக்கத்தை கீழே வெளியிட்டுள்ளோம்.. —ஆசிரியர்.]

முதலமைச்சர் அவர்களின் பேச்சு

பஞ்சாயத்தை புதிய முறையில் திருத்தி அமைத்ததற்குப் பின்னால் இப்பொழுது செயல்படுத்த ஆரம்பித்திருக்கிறோம். இதில் பல சிரமங்கள் இயற்கையாகவே ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கும். ஏற்கனவே, வெகு நாட்களாக பல கிராமங்களில் பஞ்சாயத்து இருக்கிறது. ஜில்லா போர்டு, தாலூகா போர்டு அங்கத்தினர்களாக இருந்து அனுபவம் பெற்றவர்கள் பலர், கிராமங்களில் இருக்கிறார்கள். இருந்தாலும், பெரும் அளவில் பஞ்சாயத்தை இப்பொழுதுதான் விரிவு படுத்தியிருக்கிறோம். ஏற்கனவே பஞ்சாயத்து இருந்த கிராமங்களுக்கும், புதிதாகப் பஞ்சாயத்து ஏற்படுத்திய கிராமங்களுக்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். பழைய பஞ்சாயத்து ஏற்கனவே இருந்த இடங்களில், அவ்வளவு ஊக்கமும் ஆர்வமும் உள்ளனவாக இல்லை. புதிதாக இப்பொழுதுதான் 'நமது கிராமத்திற்கு வேண்டிய எல்லா நல்ல காரியங்களையும் பஞ்சாயத்து மூலம் செய்ய முடியும்" என்ற ஆர்வமும் உணர்ச்சியும் வந்திருக்கிறது. அதை நாம் வரவேற்க வேண்டும். அந்த முயற்சியை நல்ல முறையில் நாம் பயன்படுத்துவோமேயானால், நாம் நினைக்கக் கூடிய காரியங்களை நிறைவேற்றிக்கொள்ள வசதியாக இருக்கும்.

ஒற்றுமையுடன் செயலாற்ற......

கூடுமான வரையில் பஞ்சாயத்துக்களில் அதிகமாக தகராறுகள் இருக்காது. தகராறே இல்லாமல் இருக்கவும் முடியாது. பஞ்சாயத்து அங்கத்தினர்கள் எல்லோரும் ஒற்றுமையாக, ஒரு மனதோடு இருந்தால் நல்லவேலைகளைச் செய்ய உதவியாக இருக்கும். அந்த சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்த வேண்டும். நல்ல ஆலோசனைகளை அவர்களுக்குச் சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும். ஊருக்குத் தக்கபடி ஆலோசனை கூறுவது மிகவும் அவசியமானது. ஒரு கிராமம் என்று எடுத்துக் கொண்டால் அங்கு பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் இருப்பார், கிராம முன்சீப் இருப்பார், கூட்டுறவு சங்க பிரசிடெண்ட், செகரட்டரி இருப்பார்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அப்படியில்லாமல் ஒருவருக்கொருவர் சண்டைபோடஆரம்பித்து விட்டால், அந்த ஊரில் ஒன்றும் நடக்காது. சாதாரணமாக 'பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டுக்குத்தான் அந்தஸ்து வந்துவிட்டது, நமக்குக் கௌரவம் இருக்காது' என்று கிராம முனிசிப்புகள் நினைக்கிறார்கள். 'ஒரு ஊருக்கு யார் போனாலும் பஞ்சாயத்து பிரசிடெண்ட் யார் என்றுதான் முதலில் கேட்கிறார்கள். அதனால் நம்மைப்பற்றி யாரும் கவலைப்படாமல் விட்டுவிடுவார்களோ' என்ற மனப்பான்மை அவர்களுக்கு வரும். அந்த மனப்பான்மை வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். 'கிராம முனிசீப்புகளுக்கு உள்ள கௌரவமும் அந்தஸ்தும் குறையவில்லை; அதோடு கிராம பஞ்சாயத்தை இணைத்திருக்கிறோம்' என்ற மனப்பான்மை அவர்களுக்கு உண்டாகும்படி நீங்கள் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தகராறு இல்லாமல் இருக்கும். மூன்று பேர்களையும் சேர்ந்து கலந்து எல்லா காரியங்களையும் செய்யச் சொல்ல வேண்டும்.

விவசாய உற்பத்தி பெருக......

விவசாய உற்பத்திப் பெருக வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். நாம் என்னதான் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று நினைத்தாலும்கூட, பஞ்சாயத்துக்காரர்களுக்கோ, கிராம மக்களுக்கோ அந்த எண்ணம் ஏற்படும்படி செய்ய வேண்டும். பள்ளிக்கூடம், ரோடு, விளக்கு, கிணறு வேண்டுமென்று சொல்லும் பொழுது இருக்கிற உற்சாகம் அவர்களுக்கு இதில் இல்லை. தண்ணீருக்கு ஏற்பாடு செய்ய வேண்டும், ஏரிக்கு தண்ணீர் வேண்டும், குளத்திற்கு தண்ணீர் வேண்டுமென்று சொல்வார்கள். எங்கிருந்து தண்ணீரைக் கொண்டுவருவது? மழை பெய்தால்தான் தண்ணீர். இதெல்லாம்

நாம் செய்யக்கூடியதாக இருந்தால் பரவாயில்லை. செய்து விடலாம். இருந்தாலும் நாம் அவசரமாகச் செய்ய வேண்டிய பல காரியங்கள் காலதாமதமாகிக் கொண்டிருக்கின்றன. அதை யெல்லாம் முதலில் கவனிக்கவேண்டும், அவர்களுடைய கோரிக்கைகளில் நம்மால் செய்யக்கூடியதை காலதாமதமில்லாமல் செய்துவிட்டால்தான் அவர்களுக்கும் நம்மீது நம்பிக்கை பிறக்கும். நாம் சொல்வதில் உற்சாகம் ஏற்படும். அப்படிக் காலதாமதமில்லாமல் காரியங்களைச் செய்வதற்கு என்ன வழி என்று நாம் யோசிக்க வேண்டும். அப்பொழுதுதான் விவசாயத்தில் அவர்களுக்கு உற்சாகத்தை நாம் ஏற்படுத்த முடியும். நாம் போடுகிற திட்டங்கள் எல்லாம் எதற்காக ? அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக. அதற்கு என்ன வழி ? கிராமத்தைப் பொறுத்த வரையில் விவசாயம்தான் முக்கியமானது. அதோடுகூட, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்றால், சிறு கைத்தொழில்களை ஏற்படுத்தி அவர்கள் வருவாய்க்கு வழி செய்ய வேண்டும். எந்தத் திட்டம் போட்டாலும், காரியங்கள் செய்தாலும் அதில் அவர்களுக்கு நாலு காசு கிடைக்கிறது என்றால்தான் ஒரு உற்சாகம் அவர்கள் மனத்தில் ஏற்படும். அதற்கு என்ன வழி என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும். இது மிகவும் அவசியமானது.

எவ்வளவு வேலை வந்தாலும் அதைச் செய்ய வேண்டுமென்ற மனப்பான்மை இருந்தால்தான், நமக்கு வேலை குறைவாகத் தெரியும். அப்படியில்லை என்றால் எவ்வளவு வேலை குறைவாக இருந்தாலும் அதிகமாகத்தான் தோன்றும். எல்லாம் நம் மனத்தைப் பொறுத்ததுதான்.

ஊக்கத்துடன் வேலை செய்வோம்

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் சரியாக நடக்க நாம் சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற ஊக்கத்தோடு, உணர்ச்சியோடு நீங்கள் வேலை செய்தாலதான் அதைச் சரியாகச் செய்யமுடியும். கிராமத்திலுள்ளவர்கள் எதற்கும் யோசனை கேட்க உங்களிடம்தான் வருவார்கள். நாம் அவர்களுக்குச் சொல்லக் கூடிய யோசனைகள் அவர்களை உற்சாகப்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும். அவர்கள் செய்யக்கூடிய வேலைகளுக்கு நாம் துணையாக இருக்கிறோம் என்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படும்படி நடந்துகொள்ளவேண்டும். நாமும் அவர்களுக்கு வேண்டியதைச் செய்கிறோம் என்ற மனப்பான்மை அவர்களிடத்தில் இருந்தால்தான் ஒற்றுமை ஏற்படும். எல்லாக் காரியங்களும் நன்றாக நடக்கும். இந்த ஊரில் விவசாயம் நன்றாக நடக்கிறது; காரணம் அங்கு தகராறு இல்லை என்று சொல்லக்கூடிய கிராமங்களை நீங்கள் பலருக்குத் தெரியும்படி செய்யவேண்டும். அப்பொழுதுதான் எங்கும் சண்டை சச்சரவு இல்லாமல் இருப்பதற்கு உதவியாக இருக்கும். சண்டை என்றால் என்ன ? ஊரே கூடியா சண்டை போடுகிறார்கள் ? ஏதோ சில பெரிய மனிதர்கள் செல்வாக்குக்காக, கௌரவத்திற்காக போடுவதுதான் அங்கு சண்டையாக இருக்கும். ஒற்றுமையாக இருக்கக்கூடிய ஊர்களில் நம் கவனத்தை அதிகமாகச் செலுத்தி மற்ற கிராமங்கள் அதைப் பார்த்துத் திருந்தும் அளவிற்கு நாம் அதைச் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். சிறிய காரியங்கள் உடனே செய்யப்படவேண்டும். அவையெல்லாம் பல இடங்களில் தாமதமாகி வருகின்றன. உடனே செய்யவேண்டிய காரியங்களெல்லாம் கவனித்து நிறைவேற்ற வேண்டும். நாம் சிரத்தை எடுத்துக்கொண்டு அதை முடித்துக்கொடுக்கிறோம் என்ற மனப்பான்மை இருந்தால், இதைப் போன்று எல்லாக் காரியங்களையும் நல்லமுறையில் நடத்தலாம் என்று நினைக்கிறேன்.

சென்னை ராஜாஜி ஹாலில் செப்டெம்பர் 5, 6 தேதிகளில் கலெக்டர்கள் மகாநாடு நடைபெற்றது.



உள்நாட்டுத்துறை அமைச்சரின் பேச்சு :

25-ம் தேதி பஞ்சாயத்து மகாநாடுகள் எங்கும் நடக்கின்றன. இப்பொழுதே அதற்குப் பயிற்சி நடக்கிறது. அதை நல்லமுறையில் ஏற்பாடு செய்வீர்கள் என்று நம்புகிறேன். அரசாங்கத்திற்கு அதை நல்லமுறையில் செய்யவேண்டுமென்றுதான் விருப்பம். 30-ம் தேதியும் அக்டோபர் 2-ம் தேதியும் நல்ல முறையில் எங்கும் ஏற்பாடுகள் நடக்கச் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

விவசாயம் பற்றி நாம் அதிகமாக அக்கரை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். பஞ்சாயத்துச் சட்டத்தின் பீடிகையில்கூட விவசாயத்தைத்தான் வற்புறுத்தியிருக்கிறது. விவசாயத்தைப்பெருக்கத்தான் இந்த புதியப்பஞ்சாயத்துச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் உணருவீர்கள். பஞ்சாயத்துக்காரர்கள் அதை உணரும்படி நீங்கள் செய்யவேண்டும். விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளை அளிப்பதற்குத்தான் கூட்டுறவு சங்கம். கிராமத்தில் கூட்டுறவு சங்கம் இருக்கவேண்டியது அவசியம். பொதுவாக விவசாய அபிவிருத்தியைக் கவனிப்பது பஞ்சாயத்தின் பொறுப்பு. வரிபோடுவதும் வசூல் செய்வதும் என்று இல்லாமல் பொதுவாக கிராமத்தின் வளர்ச்சி, கிராமத்தின் விவசாய அபிவிருத்தி போன்ற விஷயங்களில் பஞ்சாயத்து கவனம் செலுத்தவேண்டியது அவசியம். கிராமத்தில் போட்டா போட்டிக்கு இடம் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கூட்டுறவு சங்கமும் பஞ்சாயத்தும் ஒன்று சேர்ந்து பாடுபடவேண்டும். இரண்டு பேருக்கும் ஒரே லட்சியம். இரண்டுபேரும் சேர்ந்து செய்வதையே நீங்கள் வற்புறுத்தவேண்டும்.

தஞ்சாவூர் ஜில்லாவில் உயர்தரச் சாகுபடித் திட்டம் இருக்கிறது. மற்ற இடங்களில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பிளாக் இருக்கும் இடங்களில் கவனம் செலுத்தியும், இல்லாத இடங்களில் கவனம் செலுத்தாமலும் இருக்கமுடியாது. எல்லாப் பகுதிகளிலும் எந்த அளவுக்கு விவசாயத்தைப் பெருக்கமுடியுமோ அதைச் செய்யவேண்டும். 75 வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் வரப்போகின்றன. ஒன்றில் கவனம் செலுத்துவதால் மற்றொன்றில் கவனம் குறையும்படி இருக்கக் கூடாது, என்பதை நான் உங்களுக்கு வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக கடன் கொடுக்கும் வேலை இருக்கிறது. அதில் எல்லாம் எவ்வளவோ கஷ்டங்கள் வரலாம். உங்கள் பகுதியில் உள்ள குறைகளை அவ்வப்பொழுது தீர்ப்பதற்கு நீங்கள் முயற்சி செய்யவேண்டும்.

"சுலபமான வழி"

"ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் நான் இதைத்தான் சொல்ல ஆசைப்படுகிறேன். கிராமத்தில் குழந்தைகள் பிறக்கிறதை பதிவு செய்யும் ஜாபிதாவை பஞ்சாயத்து கையில் எடுத்துக்கொள்ளவேண்டும். கிராமத்தில், இன்னின்னாருக்கு முதல் குழந்தை, இன்னின்னாருக்கு இரண்டாவது குழந்தை, இன்னின்னாருக்கு மூன்றாவது குழந்தை என்று இந்த ஜாபிதாவில் தாக்கலாகியிருக்கும். மூன்றாவது குழந்தைக்கு தந்தையானவரைப் பார்த்து "என்னப்பா, அடுத்த குழந்தை ஏன் அப்பா உனக்கு ?" என்று கேட்க வேண்டியது பஞ்சாயத்தினுடைய பொறுப்பு.

இன்னொரு காரியமும் செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் அறுவை சிகிச்சை (வாசெக்டமி) செய்து கொண்டவர் ஒருவராவது இருக்கும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமமும் அப்படி செய்து கொண்ட நபர் ஒருவரைத் தயார் செய்து கொள்ளவேண்டும். அவர்தான் கிராமத்தின் மாதிரி குடும்ப நிர்வாகி (Model House holder).

இந்த இரண்டு காரியங்களையும் பஞ்சாயத்துக்கள் செய்து காட்டும். அதன் பிறகு குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி பிரமாதமாக பிரச்சாரம் செய்யவேண்டுவதில்லை. ஒரு கிராமத்திற்கு ஒரு "வாசக்டமி செண்டர்" ஏற்படுத்திக் கொடுங்கள். அது போதும். பட்டியலை எடுத்துக் கொண்டு இந்த மாதிரி இருக்கிறதே என்று கேட்கலாம். அப்படிச் செய்தால் போதும். பின்பு எல்லாம் ஒழுங்காக நடக்கும். நம்முடைய பிரம்மாண்டமான தேசியப் பிரச்னையான குடும்பக் கட்டுப்படுத் திட்டத்தை இவ்வளவு எளிதான முறையில் நடத்தும் வழி இருக்கிறது. இதைப் பஞ்சாயத்துக்கள் தவறாமல் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ. சி. எஸ்.,
மாநில அபிவிருத்திக் கமிஷனர்,
(பஞ்சாயத்து அபிவிருத்திக் கருத்தரங்கில் வெளியிட்ட கருத்து.)

1535

அமைதியானதொரு புரட்சி :

கல்யாணகுப்பம் காட்டும் வழி

(திரு பி. கணபதி, உப தலைவர், ஊராட்சி மன்றம், கல்யாணகுப்பம், திருவள்ளூர் வட்டாரம்.)

[19—8—60, 20—8—60 ஆகிய இந்த இரண்டு தினங்களும் நமது மாநில நிர்வாக வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய தினங்களாகும். திருவள்ளூர் வட்டாரத்தைச் சேர்ந்த கல்யாணகுப்பம் என்ற கிராமத்திற்கு மாநில அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ் , அவர்கள் இந்த இரண்டு தினங்களிலும் நேரில் விஜயம் செய்து, கிராம மக்களைக் கூட்டி, அவர்களிடம் நேரடியாகக் கலந்தாலோசித்து, திட்டம் இயற்றித் தந்தார். அரசாங்கப் பெரிய அதிகாரிகளில் ஒருவர் கிராமத்திற்கான திட்ட வேலையில் நேரில் வந்து செயலாற்றுவது என்பது ஒரு சாத்விகமான புரட்சியின் சின்னமென்பதோடு, இந்த மாநில கிராம மக்களின் வாழ்வு எதிர்காலத்தில் மிகவும் மேம்பாடான நிலையில் இருக்கும் என்பதற்கும் ஓர் அறிகுறியாகும்..... —ஆசிரியர்.]

Y31m211,N55
31K0

திருவள்ளூர் வட்டாரத்தைச் சேர்ந்த கல்யாணகுப்பம் கிராமத்தில் 19-8-60, 20-8-60 ஆகிய இரு தினங்களில் சென்னை மாநில அபிவிருத்திக் கமிஷனர் **ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி**, ஐ.சி.எஸ்., அவர்களால் ஒரு விவசாயத் திட்டம் விவசாயிகளைக் கலந்து ஆலோசித்து உருவாக்கப்பட்டது. **ஆட்சியில் உயர்ந்த பதவி வகிக்கும் ஒரு அதிகாரி, ஒரு கிராமத்திற்கு நேரடியாகச் சென்று, கிராம மக்களின் ஆலோசனைகளையும் அனுபவங்களையும் கவனமாகக் கேட்டு, அங்கேயே திட்டம் இயற்றியது இதுவே முதல் தடவை என்று உறுதியாகக் கூறலாம்.** குறிப்பாக, இந்த நற்பணிக்கு திருவள்ளூர் வட்டாரத்தில் எங்கள் கல்யாணகுப்பம் கிராமத்தைத் தேர்ந்தெடுத்தமைக்கு நாங்கள் மிகவும் பெருமிதமடைகிறோம்.

அபிவிருத்திக் கமிஷனரின் வரவு

உணவு உற்பத்தியை அதிகரிக்க என்னென்ன உபாயங்களைக் கையாள வேண்டுமென்று அதிகாரிகள் ஆணைகள் பிறப்பித்து விட்டால் மட்டும் உற்பத்தி பெருகிவிடுவதில்லை. கிராமச் சூழ்நிலைகளிலே எத்தனையோ சிக்கல்கள் இருக்கின்றன. அவைகளைத் தெளிவாக அதிகாரிகள் தெரிந்து கொண்டால், நடை முறையில் பூர்ண வெற்றியை எந்தத் திட்டத்திலும் அடைய முடியும் என்பதை நன்குணர்ந்த அபிவிருத்திக் கமிஷனர் அவர்கள் இந்தக் காரியத்திற்காக கல்யாணகுப்பம் கிராமத்தைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதில் ஐயம் இல்லை. 19-8-60 காலை அபிவிருத்திக் கமிஷனர் அவர்கள் கல்யாணகுப்பம் கிராமத்திற்கு விஜயம் செய்தார்கள். கிராம மக்களின் வரவேற்புக்குப் பின், திட்ட முறையைப் பற்றி கமிஷனர் அவர்கள் கிராம மக்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

எங்கள் கிராமத்தில் எத்தனை ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி ஆகிறது, கடந்த ஆண்டு எவ்வளவு நெல் உற்பத்தி ஆயிற்று என்பது போன்ற கேள்விகளுடன் நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. திட்டவட்டமாக இத்தனை ஏக்கராக்களில்தான் சாகுபடி செய்யப்படுகிறது, இவ்வளவு அறுவடை ஆயிற்று என்று சரிவர எங்களால் சொல்ல முடியவில்லை.

ஒருவர் 10,000 மூட்டைகள் மகசூல் ஆகலாம் என்றார் ; ஒருவர் 6,000 மூட்டைகள் இருக்கலாம் என்றார் ; முடிவாக 3,000 மூட்டைகள்தான் உற்பத்தியாகும் என்று தோராயமாக முடிவு செய்யப்பட்டது. பின், தற்போதுள்ள விளைவை 50 சத விகிதம் அதிகமாக செய்யவேண்டுமானால், என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், அதற்கான திட்டங்கள் என்னவென்று விளக்கி கமிஷனர் அவர்கள் விவாதத்தைத் தொடக்கி வைத்தார்கள்.

விளைச்சலை அதிகப்படுத்த என்ன செய்ய வேண்டும்

விளைச்சலை அதிகப்படுத்துவதற்கான முறைகளை ஒவ்வொன்றாக ஆராயலாம் என்று, முதலில் உரம் இடுதலை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டார்கள். "இந்த கிராமத்தில் எந்தெந்த உரங்கள் உபயோகப்படுத்துகிறீர்கள்? கிராமத்திலேயே தயாராகும் எருவை உபயோகப்படுத்துவதானால், நல்ல விளைவைப் பெற எத்தனை வண்டி குப்பை எருவை உபயோகப்படுத்த வேண்டும்" என்று கமிஷனர் அவர்கள் கேட்டார்கள். ஆட்டுக்கிடை வைப்பதிலிருந்து அமோனியம் சல்பேட் உபயோகப்படுத்துவது வரை தோராயமாக எவ்வளவு உபயோகப்படுத்தப்படுகிறது என்று எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். ஒரு ஏக்கருக்கு சுமார் 12 வண்டி குப்பை எரு நல்ல விளைவை தரும் என்று எல்லோரும் ஏகோபித்து அபிப்பிராயப் பட்டார்கள். அப்படியானால் எங்கள் கிராமத்திற்கு $392 \times 12 = 4,704$ வண்டி எரு வேண்டும். ஆனால் சராசரி வீட்டிற்கு 5 வண்டி எருதான் தயார் செய்ய முடியும் என்றும் கிராமத்திலுள்ள 220 வீடுகளில் 1,100 வண்டி குப்பை தான் கிடைக்கக்கூடும் என்றும் தெரிந்துக்

மாநில அபிவிருத்திக் கமிஷனருடன் கல்யாணகுப்பம் கிராம மக்கள்.
மாவட்டக் கலெக்டர் ஸ்ரீ சிவசுப்ரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்களும் கிராம அபிவிருத்தி தல நிர்வாகத்துறை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

கொண்டோம். இது தவிர, உபயோகத்திலிருக்கும் 600 செம்மறி ஆடுகள் மூலமாகக் கிடைக்கும் உரத்தின் அளவு அதற்கு ஈடான குப்பை எருவின் விகித அளவு, கடந்த ஆண்டு உபயோகப்படுத்தப்பட்ட கடலைப் பிண்ணாக்கின் அளவு, அமோனியம் சல்பேடு, யூரியா, சூப்பர் பாஸ்பேட் உரங்களின் அளவு, அவைகளுக்கு ஈடான குப்பை உரத்தின் விகித அளவு, இவைகள் அனைவற்றையும் கூட்டிப் பார்த்தார்கள். முடிவில் ஒரு ஏக்கருக்கு 9 வண்டி குப்பை எருவுக்கு ஈடான உரம்தான் உபயோகப்படுத்தப்பட்டு வந்தது தெரிந்தது. ஒரு ஏக்கர் நிலத்திற்கு சராசரியாகத் தேவையான 12 வண்டி குப்பை எருவுக்கும் குறைவாக வேதான் கிராமத்தில் பலவிதங்களில் எருவிடப்படுகிறது என்ற உண்மை தெரிய வந்தது.

அதன்பின் ஒவ்வொரு ஏக்கரா நிலத்திற்கும் 12 வண்டி குப்பை எருவுக்கு சமமான எருவைப் பெற வேண்டுமானால், கிராமத்தார் என்ன செய்யவேண்டும் என்ற பிரச்னை கமிஷனர் அவர்களால் எடுத்துக்கொள்ளப் பட்டது. பசுந்தாள் உரப் பயிர்கள் செய்வதால் ஏற்படும் பலாபலன்களையும், கிளைரிஸீடியா, புங்கன் போன்ற தழை தரும் மரங்களை வைத்து பாதுகாப்பதன் மூலம் கிடைக்க கூடிய பலன்களையும் ஆராயும்படி தூண்டினார்கள். கிராமத்தில் போதிய மேய்ச்சல்கால் புறம்போக்கோ மற்ற எந்த விதமான புறம்போக்கு நிலங்களோ இல்லாத குறைகளை கிராமத்தினர் எடுத்துரைத்தனர். சாகுபடியாகும் நிலங்களிலே பசுந்தழைகளைத் தரக்கூடிய மரங்களை ஏன் நடக்கூடாது என்ற கேள்வியையும், அவைகளை பாதுகாத்து பலனை அடைந்து வரும் விவசாயிகளின் அனுபவங்களையும் கமிஷனர் எடுத்துரைத்தனர்.

உற்பத்தியைப் பெருக்க ஒரு குழு

முதல் நாள் மூன்றரை மணி நேர ஆலோசனைக்குப் பின், கிராமததின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் திட்டமிட்டு நபர்கள் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. அக்குழு மாவட்ட விவசாய அலுவலர், வட்டார விவசாய அலுவலர், கம்போஸ்ட் டெவலப்மெண்ட் இன்ஸ்பெக்டர் ஆகியவர்களது உதவியுடன் அன்று பிற்பகல் கீழ்க் கண்ட விஷயங்கள் குறித்து ஆலோசனைகள் நடத்தி முடிவுகள் செய்தனர் :—

திட்டக் குழு எடுத்துக்கொண்ட விஷயங்கள் :—

(1) உர உற்பத்தி ; (2) பசுந்தழை உர உற்பத்தி ; (3) பொறுக்கு விதை உற்பத்தியும் வினியோகமும் ; (4) பயிர்ப் பாதுகாப்பு ; (5) நூதன விவசாயக் கருவிகள் உபயோகம் ; (6) ஜப்பான் முறை நெல் சாகுபடி ; (7) நிலக்கடலை சாகுபடி ; (8) ஆமணக்கு சாகுபடி ; (9) மரம் நடுதல் ; (10) நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல்.

" அரசாங்கம் என்பது ஜனங்களுக்குப் புறம்பானதன்று. பெரும்பாலோருடைய அபிப்பிராயப்படி நடக்கும் ஒரு ஸ்தாபனமே யாகும்."

> "வேறு எத்தகைய உறுதி உடையவராக இருந்தாலும், செய்யும் தொழிலில் உறுதி இல்லாத வரை உலகம் விரும்பிப் போற்றுது".
>
> —திருவள்ளுவர்

இக்குழு கொண்டு வரும் தீர்மானங்களை வைத்துத் தொடர்ந்து ஆலோசனைகள் செய்ய அபிவிருத்திக் கமிஷனர் அவர்கள் முடிவு செய்தார்கள். இரண்டாம் நாள் (20–8–60) காலை மீண்டும் எங்கள் கிராமத்திற்கு அபிவிருத்திக் கமிஷனர் அவர்கள் வந்திருந்தார்கள். திட்டக்குழு தீர்மானித்த தீர்மானங்களின்படி கம்போஸ்ட் உரக் குழிகள் யார் யார் எத்தனை போடுவது என்றும் எத்தனை ஏக்கர் நிலங்களில் பசுந்தாள் உரப் பயிர் சாகுபடி செய்யப்படும் என்றும், எத்தனை பசுந்தழை மரங்கள் நடப்படும் என்றும், ஒரு ஏக்கருக்கு சராசரி 12 வண்டி குப்பை எருவுக்கு ஈடான உரம் செய்ய என்னென்ன உபாயங்களை பயன்படுத்துவது என்றும் திட்டவட்டமான முடிவுகள் கொடுக்கப்பட்டிருந்தன. அம்முடிவுகளில் பொறுக்கு விதை உற்பத்தி வினியோகம் சம்பந்தமாக செய்யப்பட்ட முடிவு குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட மூன்று நபர்கள் சொர்ணவாரி பயிருக்கான **TKM** 6, சம்பா பயிருக்கான **B.A.M.** 3, **Co.** 19, நவரைப் பயிருக்கான **Co.** 18 ஆகிய விதைகளை உற்பத்தி செய்வர். இப்படி உற்பத்தி செய்யப்பட்ட விதைகளை அறுவடையான உடனே, அல்லது இருப்பு வைத்திருந்தோ மற்ற விவசாயிகளுக்கு இவர்கள் வினியோகம் செய்ய வேண்டும். அறுவடையானவுடன் வினியோகிப்பதாக இருந்தால், மூட்டைக்கு ரூ. 4 பிரீமியமாகவும், இருப்பு வைத்திருந்து விதைக்கும் காலத்தில் வினியோகிப்பதாக இருந்தால் ரூ. 5 பிரீமியமாகவும் கொடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தின் மீது விவாதம் எழும்போது "பொறுக்கு விதைகளின் தரத்தை உத்தேசித்து அவைகளைப் பாதுகாத்து, மேற்படி நபர்கள் மற்ற விவசாயிகளுக்கு உதவ முன் வருவார்களா? அல்லது அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பிரீமியத்தைவிட அதிகமான விலை சந்தையில் வருமானால் இலாபத்தைக் கருதி விற்று விடுவார்களா?" என்ற ஐயத்தை எழுப்பினார்கள். சமுதாயத்தின் நலனை உத்தேசித்து எல்லோரும் ஒன்று சேர்ந்து முடிவு செய்த ஒன்றை தனி நபர் மீறுவது கிடையாது, இது கிராமப் பண்பாடு என்று திட்டக் குழுவின் அங்கத்தினர்கள் விளக்கினார்கள். இதைப் பெரிதும் கமிஷனர் அவர்கள் வரவேற்றார்கள். இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லாவிடில் மனித முயற்சி பயனளிக்காது என்றும் அறிவுறுத்தினார்கள்.

பயிர்ப் பாதுகாப்புக்காக செய்ய வேண்டியது

விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. பயிர்ப் பாதுகாப்புக்காக திட்டக்குழு 6 ஸ்பேரயர்கள் கிராமத்திற்கு தேவைப்படும் என்று முடிவு செய்தது. இந்த ஸ்பேரயர்களை தனிப்பட்ட நபர்கள் வாங்குவதா அல்லது பொது ஸ்தாபனங்கள் வாங்குவதா, அப்படி வாங்குவதானால் அரசாங்கம் எத்தகைய உதவியைச் செய்ய வேண்டும் என்ற முடிவை கிராம மக்களே தெரிவிக்கவேண்டுமென கமிஷனர் அவர்கள் எடுத்துரைத்தனர். கல்யாணகுப்பம் கிராமம் காட்டும் வழியைத்தான் மற்ற **20,000** கிராமங்களும் கையாளும் என்றும் விளக்கினார்கள். தனி நபர்களுக்கு சப்ஸிடி (**Subsidy**) மூலம் ஸ்ப்ரேயரர்கள் வினியோகம் செய்தால், தேவையான காலங்களில் ஏழைகளுக்கோ போதிய மதிப்பு இல்லாத நபர்களுக்கோ அவைகள் கிடைப்பது அரிது என்றும், பஞ்சாயத்தே அவைகளை வாங்கி நிர்வகிக்க வேண்டும் என்றும், அவைகளை பராமரிப்பதற்காக குறைந்த தொகையை அன்றாட வாடகையாக வசூலிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. பூச்சிகளோ, நோய்களோ பரவும் காலங்களில் எல்லா விவசாயிகளும் தடுப்பு முறைகளை கட்டுப்பாடுடன் அனுசரிக்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

காந்திஜியின் கனவு நனவாகிறது

அபிவிருத்திக் கமிஷனர் போன்ற உயர்தர அதிகாரிகள் கிராமங்களில் நேரே வந்து, பிரச்னைகளை நேரில் கண்டறிந்து, ஆவனபுரிகின்ற அற்புதத்தை நினைக்கும்போது அண்ணல் காந்தியடிகள் கண்ட கனவு நனவாகிக்கொண்டு வருகிறது என்று சொல்ல என்ன தடையிருக்கிறது!

Y31m9:11,N55
31K0

> "தவறை ஒத்துக்கொள்ளும்பொழுது, மனத்திலே படிந்து கிடக்கும் அழுக்குகளும் துடைத்தெறியப் படுகின்றன. மனம் முன்னைவிட பளிங்கு போல் நிர்மலமாக இருக்கும். தன் மனச்சாட்சிக்கு விரோதமாக பொய்யுரை இருப்பதைக் காட்டிலும், உலகத்தின் கண் முன்னால் ஆயிரம் தடவை பொய்யுரை இருப்பது எத்தனையோ மடங்கு மேலானதாகும்"
>
> —மகாத்மா காந்தி.

G.N.—3



1

2

1. சைதை வட்டாரம், சாலியூர் கிராமத்தில் 20—8—60ல் பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடு நடைபெற்றது. 2. இணை அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி அவர்களுக்கு வரவேற்பு.

3

3. கல்யாணகுப்பம் கிராமத்திற்கு விஜயம் செய்த அபிவிருத்திக் கமிஷனர் அவர்கள் பேச்சை கிராம மக்கள் கேட்கின்றனர்.

4. ஜப்பானிய முறை நெல்

குடும்பக் கட்டுப்பாடு:

வாழ்விலே மகிழ்ச்சி பொங்க...

பொ. திருகூடசுந்தரம், எம்.ஏ.,பி.எல்.

எந்த ஆப்பரேஷன் நல்லது ?

[' கிராம நலம் ' சென்ற இதழில் திரு பொ. திருகூடசுந்தரம் அவர்களின் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய முதல் கட்டுரையை வெளியிட்டிருந்தோம். அந்த வரிசையில் இது இரண்டாவது கட்டுரை. "ஆண் ஆப்பரேஷன் செய்து கொள்வது நல்லதா ? பெண் ஆப்பரேஷன் செய்து கொள்வது நல்லதா ? எந்த ஆப்பரேஷன் நல்லது ?" என்பது பற்றி இந்தக் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

—ஆசிரியர்.]

நாடு நலம் பெறவும், நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் நலம் பெறவும், ஒவ்வொரு தம்பதிகளும் இரண்டு மூன்று குழந்தைகட்கு அதிகமாகப் பெறலாகாது என்று அறிஞர்கள் கூறி வருகிறார்கள். அரசாங்கத்தாரும் அவ்விதமே பிரசாரம் செய்து வருகிறார்கள்.

"அப்படியானால் எல்லோரும், காதலின்பம் அனுபவிப்பதை விட்டுவிட்டுத் துறவிகளாக ஆகிவிட வேண்டுமோ, அது எல்லோர்க்கும் சாத்தியப்படுமோ ?" என்று சிலர் கேட்கிறார்கள். இரண்டு மூன்று குழந்தைகள் போதும் என்று கூறுவோர், யாரையும் துறவுகொள்ளச் சொல்லவில்லை. காதலின்பத்தை விட்டுவிட வேண்டும் என்றும் கூறவில்லை. அவர்கள்

காதல், காதல், காதல் ; காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்.

என்று பாரதியார் பாடியதை அறிவார்கள். அதைச் சரியென்று ஒப்புக்கொள்ளவும் செய்கிறார்கள்.

காதலின்பம் கடுகளவும் குறையாது

அவர்கள் காதலின்பம் வேண்டாம் என்று கூறவில்லை. அதிகக் குழந்தைகள் வேண்டாம் என்றே கூறுகிறார்கள். காதலின்பம் துய்த்தால் கருத்தரிக்குமே என்றால் காதலின்பம் துய்த்தாலும் கருத்தரியாமல் இருப்பதற்கான வழிகளை டாக்டர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். கணவனோ, மனைவியோ ஒரு ஆப்பரேஷன் செய்து கொண்டால் கருத் தரியாது என்று கூறுகிறார்கள்.

டாக்டர்கள் கூறும் இந்த ஆப்பரேஷன்கள் சிறியவை, எளிதில் செய்யக் கூடியவை, எவ்வித அபாயமும் இல்லாதவை. இதனால் காதலின்பம் கடுகளவும் குறையாது, குழந்தை மட்டும் பிறக்காது. அவ்வளவுதான். ஆப்பரேஷன் செய்து கொள்பவர்க்கு உடல் நலம் முன்னிலும் சிறந்ததாக இருக்கும். இந்த ஆப்பரேஷனை வெள்ளைக்கார நாடுகளில் கிழவர்கள் பலமாக இருப்பதற்காகச் செய்து கொள்கிறார்கள்.

இத்துணைச் சிறந்த ஆப்பரேஷன்கள் யாவை என்று அறிவதற்குமுன் கருப்பம் எவ்வாறு உண்டாகின்றது என்று அறிந்துகொண்டால் நல்லது.

கருப்பம் உண்டாவதற்கு வேண்டிய விந்துயிர்கள் கணவனுடைய விதைகளில் உற்பத்தியாகின்றன. அவை மிக மெல்லிய விந்துக்குழாய்கள் வழியாகச் சென்று விந்துப் பைகளில் தங்குகின்றன. கலவி செய்யும்போது கணவனுடைய கோசத்தில் ஒரு வழவழப்பான விந்து நீர் சுரக்கும். விந்துப்பைகளிலுள்ள விந்துயிர்கள் அந்த விந்து நீரில் மிதந்து கோசத்தின் (ஆண் குறியின்) வழியாக

மனைவியின் குய்யத்தில் (பெண் குறியில்) பாயும். பின் அவை கருப்பப்பை வழியாகச் சென்று சினைக்குழாயினுள் செல்லும்.

ஒவ்வொரு மாதமும் சினைப்பையிலிருந்து ஒரு முட்டை வெளியாகி சினைக்குழாய்க்கு வந்து சேரும். இந்த மாதம் வலது பையிலிருந்து வலது குழாய்க்கு வந்தால், அடுத்த மாதம் இடது பையிலிருந்து இடது குழாய்க்கு வந்து சேரும்.

விந்துயிர்கள் சினைக்குழாயில் நுழையும்போது அங்கு முட்டை இருக்குமாயின் அதனுடன் கலக்க முயலும். ஏதேனும் ஒரு விந்துயிர் முட்டையுடன் கலந்துவிடுமாயின் அதுவே கருவாகும். உடனே மற்ற உயிர்கள் இறந்து போகும். கருவானது கருப்பப்பைக்கு வந்து தங்கி வளர்ந்து பத்து மாதங்கள் சென்றதும் குழந்தையாகப் பிறக்கும்.

ஆகவே குழந்தை உண்டாவதற்கு, கருப்பம் தரிப்பதற்கு இரண்டு காரியங்கள் நடைபெற வேண்டும். (1) ஆணின் கோசத்தின் வழியாகப் பெண்ணின் குய்யத்துள் பாயும் விந்துநீரில் விந்துயிர்கள் இருத்தல் வேண்டும். (2) பெண்ணின் சினைப்பையிலிருந்து முட்டை சினைக் குழாய்க்கு வந்து சேரவேண்டும்.

இந்த இரண்டு காரியங்களும் நிகழ்ந்தால்தான் விந்துயிர் முட்டையுடன் கலந்து கரு உண்டாகும். ஆதலால் கரு உண்டாகாதிருக்க வேண்டுமாயின்,

(1) விந்துயிர் குய்யத்துள் வந்து சேராதபடி தடுத்துவிடவேண்டும், அல்லது (2) முட்டை சினைப்பையிலிருந்து சினைக்குழாய்க்கு வந்து சேராதபடி தடுத்துவிட வேண்டும்.

இரண்டுவித ஆப்பரேஷன்கள்

டாக்டர்கள் விந்துயிரைத் தடுப்பதற்காகக் கணவனுடைய விந்துக் குழாய்கள் ஒவ்வொன்றிலும் அரை அங்குலம் வெட்டி எடுத்துவிட்டு அறுத்த முனைகளை இறுக்கிக் கட்டி விடுகிறார்கள். இந்த ஆப்பரேஷனை "**விந்துக் குழாய் வெட்டல்**" என்று கூறுவார்கள். இந்த ஆப்பரேஷன் செய்தால் விதையில் உற்பத்தியாகும் விந்துயிர்கள் விந்துப்பைக்குச் செல்ல முடியாது. அதனால் அவை குய்யத்துக்குள் வந்து சேர வழியில்லை. விந்துயிர் குய்யத்துள் வராவிட்டால் கருப்பம் எப்படித் தரிக்க முடியும்? முடியாது.

டாக்டர்கள் முட்டையானது சினைக்குழாய்க்கு வருவதைத் தடுப்பதற்காக இரண்டு சினைக்குழாய்கள் ஒவ்வொன்றிலும் அரை அங்குலம் வெட்டி எடுத்துவிட்டு அறுத்த முனைகளை இறுக்கிக் கட்டி விடுகிறார்கள். அதனால் முட்டை சினைக்குழாய்க்கு வராது. விந்துயிர்கள் மட்டும் வந்து பயனில்லை. கருப்பம் தரிக்காது. இந்த ஆப்பரேஷனை "**சினைக்குழாய் வெட்டல்**" என்று கூறுவார்கள்.

இந்த இரண்டு ஆப்பரேஷன்களில் எதைச் செய்து கொண்டாலும் கருப்பம் உண்டாகாது. குழந்தை பிறக்காது. ஆனால் சிலர் என்னிடம் "இரண்டு ஆப்பரேஷன்கள் என்று கூறுகிறீர்களே, அவற்றுள் எந்த ஆப்பரேஷன் நல்லது" என்று கேட்கிறார்கள்.

எந்த ஆப்பரேஷனைச் செய்வதிலும் கஷ்டமில்லை, அபாயமுமில்லை, எதைச் செய்தாலும் குழந்தை பிறக்காது. ஆதலால் இரண்டு ஆப்பரேஷன்களும் நல்லவைகளே.

ஆண் ஆப்பரேஷன் செய்துகொள்ளுதல் எளிது

ஆயினும் எதைச் சிபார்சு செய்கிறீர்கள் என்று கேட்டால், நான் கணவன் செய்யும் ஆப்பரேஷனையே சிபார்சு செய்வேன். அதற்குரிய காரணங்கள் இவை :—

1. கணவன் எந்த நேரத்திலும் செய்து கொள்ளலாம். மனைவி குழந்தை பெற்று மூன்றாவது நாளே செய்யலாம். மற்ற வேளைகளில் செய்வதானால், வயிற்றைக் கீறியே செய்ய வேண்டும். அதையும் அபாயமில்லாமலே டாக்டர்கள் செய்கிறார்கள். ஆயினும் அது அவசியமில்லை. குழந்தை பெற்றவுடன் செய்வதே நல்லது. அப்போது வயிற்றைக் கீற வேண்டாம். குய்யம், கருப்பப்பை முதலியவை குழந்தை வெளிவரக்கூடிய அளவு விரிந்திருக்குமாதலால் அதன் வழியாகவே ஆப்பரேஷனை எளிதில் செய்து விடுவார்கள்.

2. கணவனுக்குச் செய்யும் ஆப்பரேஷன் வயிற்றுக்கு வெளியே நடப்பது. ஆனால் மனைவிக்குச் செய்யும் ஆப்பரேஷன் வயிற்றினுள்ளே நடப்பது. அதனால் கணவன் ஆப்பரேஷன் மனைவி ஆப்பரேஷனைவிட எளிது.

3. அத்துடன், கணவன் வைத்தியசாலையில் படுத்திருக்கவேண்டியதில்லை. ஆப்பரேஷன் முடிந்ததும் வீட்டுக்கு வந்து விடலாம். வீட்டிலும் நாலைந்து நாள் அதிகமாக நடக்காமலிருந்தால் போதும், படுத்திருக்க வேண்டியதில்லை.

ஆகவே இரண்டு மூன்று குழந்தைகள் உடைய தந்தைமார்களே! எவ்விதத் தயக்கமின்றி ஆப்பரேஷன் செய்து கொள்ளுங்கள். தமிழ் நாட்டிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலெல்லாம் இலவசமாகவும் மிகுந்த கவனமாகவும் ஆப்பரேஷன் செய்கிறார்கள். ஆப்பரேஷனைச் செய்து உங்களுக்கும், உங்கள் மனைவிமார்க்கும், உங்கள் குழந்தைகளுக்கும் நலம் தேடுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

"வேண்டாத பொழுது குழந்தைகளைப் பெறுதல் பாபம். செய்த காரியத்தின் பலன்களைப் பெற மறுப்பது அதைவிடப் பெரிய பாபமாகும். அது மனிதனை மனித பதவியிலிருந்து தாழ்த்துவதாகும்."

எழுத்தாளர்களின் கவனத்திற்கு

பிறர் எழுதிய கதைகளையும், நாடகங்களையும், கட்டுரைகளையும் தழுவாமலும், மொழிபெயர்க்காமலும் சொந்த கற்பனை அல்லது அனுபவத்தையொட்டி, எழுதியனுப்பப்படும் சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள். நாட்டுப் பாடல்கள், கிராம நலம் பற்றிய கட்டுரைகள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து கிராம நலத்தில் வெளியிடுவதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. கிராம நலத்தில் பிரசுரிக்கப்பட்ட பிறகு, அவைகளில், சிறந்தவற்றிற்கு ஒவ்வொரு மாதமும் கீழ்க்கண்டவாறு சன்மானம் வழங்கப்படும் :—

சிறு கதை.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இது 5 பக்கங்களுக்குட்பட்டு இருக்கவேண்டும்)—ரூ. 25,

ஓரங்க நாடகம்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், 6 பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 25.

பாடல்கள்.—("கிராய நலத்தில்" வெளியிட்டால், இவை ஒரு பக்கத்துக்குள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

கிராம வளம், காந்திய நிர்மாணத் திட்டங்கள் பற்றிய கட்டுரைகள்.—(இவை "கிராம நலத்தில்" வெளியிட்டால், இரண்டு பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு)

முக்கிய குறிப்பு—சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள் முதலியவை **பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், காந்திய தத்துவம்** முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதுடன், விவசாயம் பற்றியோ சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் தமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை யொட்டி, எழுதப் எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும். சிறந்த கதைகளுக்கும், நாடகங்களுக்கும், நாட்டுப் பாடல்களுக்கும், கட்டுரைகளுக்கும் சன்மானமளிப்பது பற்றி ஆசிரியர் செய்யும் முடிவே இறுதியானது. "கிராம நலத்தில்" பிரசுரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் முதலியவற்றைத் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல. எனவே, தங்கள் எழுத்தோவியங்களின் மூலத்தை அனுப்பாமல், நகல்களை மட்டும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அரசாங்க உத்தியோகச் சார்புள்ளவர்களும், இந்தப்பணியில் நேரடியாகக் கலந்துகொள்ளலாம். அரசாங்கப் பத்திரிகையான "கிராம நலத்திற்கு" எழுத, அவர்களுக்கு எந்த விதத் தடையும் இல்லை. சன்மானம் பெற அவர்களும் உரிமை உள்ளவர் ஆவர்.

சிறப்பாக, புதிய எழுத்தாளர்கள்—கிராம சேவையில் ஊறியவர்கள்—தாம் பெற்ற அனுபவங்களை மற்றவருடன் பகிர்ந்துகொள்ளும் தொண்டுள்ளமும் கலை ஆர்வமும் படைத்தவர்கள்—இந்த வாய்ப்பை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டு, திறமை மிக்க எழுத்தோவியங்களை உடனடியாக அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்,
"கிராம நலம்"
கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9.

சமுதாய அபிவிருத்தி பற்றிய மாநில ஆலோசனைக் குழுவின் கூட்டம் 27-7-1960 அன்று நடைபெற்றது.

காந்தி அஞ்சலி:

நமது காணிக்கை

[2—10—60 தேதியில், நமது மாநிலத்தில், 75 வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அமைகின்றன. காந்தியடிகள் கண்ட கனவு நனவாகத் தொடங்கியுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த சுபதினத்தில், தேசப் பிதாவிற்கு நமது நன்றிகலந்த அஞ்சலியைச் செலுத்துவோமாக....

—ஆசிரியர்.]

தேசப்பிதா காந்திஜியின் பிறந்த தினத்தை ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருகிறோம். ஆனாலும் இவ்வருடத்திய காந்திஜெயந்தி சென்னை மாநில ஆட்சித் துறையின் சரித்திரத்தில் மிகமுக்கியத்துவம் வாய்ந்ததாகும். தேசப் பிதாவின் கனவாகிய கிராம ராஜ்ய அடிப்படைகளைக் கொண்ட பஞ்சாயத்துக்களின் கூட்டாட்சி அமைப்பு அன்றைய தினத்தில், மாநிலத்தின் எழுபத்தைந்து வட்டார வளர்ச்சிப் பகுதிகளில் உருவாகவிருக்கிறது.

இந்த பஞ்சாயத்துக்களின் கூட்டாட்சி அமைப்பு பற்றி மேற்செல்லுமுன்னர், நாட்டின் தற்போதைய சுதந்திர நிலையைப்பற்றியும், அதன் தொடர்ச்சியாக இக்கூட்டாட்சி அமைப்பின் முக்கியத்துவம் பற்றியும் சிறிது கவனிப்போம்.

நாட்டின் நிலை

நாடு அந்நியரிடமிருந்து விடுதலை பெற்று பதின்மூன்று வருடங்களாகின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் பூர்த்தியடையும் நிலையில் உள்ளோம். எனினும், திருப்தியடையத்தக்க அபிவிருத்தி ஸ்திரப்படவில்லை. விவசாயத்தில், உலகிலேயே பழமை கொண்ட நாடு நமது ; அதிகமான மக்கள் சக்தி விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. எனினும், ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த உணவுப் பிரச்னை இன்னும் திருப்திகரமாக தீர்க்கப்படவில்லை. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் உணவுப் பொருள் உற்பத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டிருக்கின்றன ; உணவு உற்பத்தியும் ஓரளவு பெருகியிருக்கிறது. ஆனால் தொடர்ந்த ஜனப்பெருக்கம், மற்றும் பல காரணங்களால் பிரச்னை நீடித்துக்கொண்டேயிருக்கிறது. நாம் இன்றும் நாட்டின் உணவுப் பொருள் தேவைக்கு வெளிநாடுகளில் விலை கொடுத்து எதிர்பார்த்து நிற்கும் நிலையிலேயே இருக்கிறோம். இந்தவகையில் ஏற்படும் அதிகச் செலவினம் காரணமாக, நாட்டின் இயந்திரத்தொழில், மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் பெரும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

சுதந்திரப் பிதா

உலக சரித்திரத்தில், தேச விடுதலைக்கான அரசியல் போராட்டத்தில் சத்தியத்தையும், அஹிம்சையையும் நிலை நாட்டி, அரசியல் போராட்டத்தின்போதே நாட்டின் சுபீட்ச பொருளாதார நிலைக்கான சுயதேவைப் பூர்த்தி அம்சத்தை மக்களிடையே உணர்த்தி, விடுதலைப் போராட்ட சக்தியின் உண்மை பலத்தை தேச நிர்மாணத் திட்டங்களின் வளர்ச்சிகளிலே கணக்கிட்ட, ஒப்புவமை அற்ற ஓர் மகானை தேசீய சுதந்திரப் பிதாவாகக் கொண்ட நாம், நாட்டின் தற்போதைய சுதந்திர நிலையின் தன்மையை உணராமலிருக்கமுடியாது.

உண்மையான சுதந்திரம்

நாடு தன்னாட்சி மட்டுமே, அதாவது அரசியல் விடுதலையே பெற்றிருக்கிறது. தன்னாட்சியின் பிரிக்க முடியாத அம்சமாகிய தன்னிறைவினால் ஏற்படக்கூடிய பொருளாதார விடுதலை இன்னும் காரிய சித்தியாகவில்லை. அரசியல் விடுதலையும், பொருளாதார விடுதலையும் நெருங்கிய சம்பந்தமுள்ளவை. அரசியல் விடுதலை நாட்டின் தன்மானத் தேவையை நிறைவுபடுத்துவது ; பொருளாதார விடுதலை சமூகத்தின் சுபீட்ச வாழ்வைக் கொடுப்பது ; நாட்டின் நிர்வாகத்தைக் தனதாக்குவது அரசியல் விடுதலை ; நாட்டின் மூலாதாரச் செல்வங்களை எல்லாம் சமூகத்தின் நலனுக்கு உபயோகமாகச் செய்து, செழிப்பான வாழ்க்கைத் தரத்தை சாத்தியமாக்குவது பொருளாதார விடுதலை ;. சமூகத்தின் பொருளாதார விடுதலைக்கு முட்டுக்கட்டையாயிருக்கும் அந்நிய ஆட்சி என்ற தடை நீக்கமே அரசியல் விடுதலை ; பொருளாதார விடுதலையை அடைந்து விடுவோம் என்ற தீர்க்கமான தன்னம்பிக்கையே அரசியல் விடுதலை பெறுவதற்கான தன்மானப் போராட்டத்திற்குத் தூண்டுகோல். மேற்கண்ட இரு அம்சங்களும் காரியார்த்தமாக நிறைவேறும்போதுதான், ஒரு நாடு உண்மையான சுதந்திர நிலையை எய்தியதாகக் கொள்ளலாம்.

பொருளாதார விடுதலை

ஆகவே, பெற்றுள்ள அரசியல் விடுதலையோடு, நாட்டில் நல்வாழ்வு நிலவ பொருளாதார விடுதலை பெறுவதற்கான முயற்சிகள் செய்யவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அரசியல் விடுதலைக்கு தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்த பல தீரர்களை முன்னோர்களாக கொண்டவர்கள் நாம். பல அருந்தியாகங்கள் புரிந்த தேசியத் தலைவர்களையே இன்றைய ஆட்சித் தலைவர்களாகப் பெற்றிருக்கிறோம். பொருளாதார ரீதியில், சாத்வீக, சமதர்மக் கொள்கைகள் படிப்படியாக நடைமுறைக்கு கொண்டுவரப்படுகின்றன. அத்தகைய ஒரு நிலையை ஸ்தாபிக்க மக்களாட்சி பல திட்டங்களை செயலாற்றி வருகிறது. அத்திட்டங்களின் வெற்றியைப் பொறுத்ததே, இந்த நாட்டின் பொருளாதார விடுதலை எய்தப் பெறுவதும், ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ள அரசியல் விடுதலையை உண்மையான சுதந்திர நிலைக்கு உறுதிப்படுத்துவதுமாகும்.

அரசியல் விடுதலைப் போராட்டத்தில் தேசப்பற்றின் காரணமாக நாடு காட்டிய போராட்ட உணர்ச்சியின் தொடர்ச்சியாக, சமுதாய நல்வாழ்வை உருவாக்கும் பொருளாதார விடுதலைக்கான முயற்சிகளுக்கு, நாட்டு மக்களின் சுயநலமற்ற சமுதாய உணர்ச்சி இன்றியமையாதது. தேவையான இந்த சமுதாய நல உணர்ச்சி போதிய அளவில் ஸ்தாபன ரீதியாகவும், திட்டமாகவும் உருவாகாமையே, இன்றைய நமது பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் திருப்திகரமான அளவில் வெற்றியடையவில்லை என்பதற்கு காரணம்.

பஞ்சாயத்து மறுமலர்ச்சி

இவ்வாறான நிலைமைகளை நம் தலைவர்கள் ஆராய்ந்து, இந்நாட்டு மக்களின் புராதீன வாழ்க்கை முறையையும் மனத்தில் கொண்டு, நாட்டு மக்களின் அரும்பெருந் தியாகங்களின் பலனைப் பெற்ற அரசியல் விடுதலையை மக்களின் பொருளாதார நல்வாழ்வுக்கான முயற்சிகளில் பயன்படுத்தவும், ஜனநாயக மக்களாட்சி முறையை தேச அடிப்படையில் ஸ்திரப்படுத்தவும், இந்நாட்டின் ஜீவாதார கேந்திர ஸ்தாபனங்களான கிராமங்கள், இழந்த தன் பெருமையைப் பெற்று, சட்ட பூர்வமான மக்களாட்சி முறையில் ஓர் பொறுப்புள்ள அங்கமாகத் திகழ்ந்து அதன் மூலம், தேச நிர்வாகப் பொறுப்பில் அவைகளைப் பங்கு பெறச் செய்யவும், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் வெற்றிக்கு சமுதாய உணர்ச்சியோடு கூடிய ஸ்தாபன ரீதியான ஒத்துழைப்பைத் திரட்டவும், இத்தகைய கிராம அங்கங்களின் கூட்டமைப்புகளிடம் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதிவசதிகளோடுகூடிய அதிகாரங்களை சட்ட அமைப்புகளுக்குட்பட்டு பரவலாக்குவதற்கும் வழிசெய்யவே 1958-ம் வருடத்திய புதியப் பஞ்சாயத்து சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

கிராமப் பஞ்சாயத்து

புதியப் பஞ்சாயத்து சட்டத்தின்கீழ் கிராமப் பஞ்சாயத்துக்கள் கிராமாபிவிருத்திக்கான திட்டங்களை வகுத்து அவைகளை நிறைவேற்றும் பொறுப்புமிக்க அங்கமாகத் திகழும். வழக்கமான ஊர் துப்புரவு, குடி தண்ணீர்வசதி, சுகாதாரம், விளக்கு வசதி இவைகளோடு, கிராமப் பஞ்சாயத்துக்கள், தங்கள் கிராமம் தன்னிறைவு அடைவதற்கான திட்டங்களிட்டு அவைகளை நிறைவேற்றும் வகையில் செயல்படுவதற்குமான பொறுப்பையும் ஏற்கின்றன. வழக்கமான பஞ்சாயத்து வரிகள் நீங்கலாக கிராம அபிவிருத்தி வேலைகளுக்கு, பஞ்சாயத்துக்களுக்கு சர்க்கார் மானியங்கள் கிடைக்கவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. விவசாய முன்னேற்றத்தின் மூலம் ஏற்படும் அதிக உற்பத்தியே நாட்டின் இன்றைய கடினமானபொருளாதார நிலையை அகற்றுவதற்கான மூலாதார அம்சமாயிருக்கிறது. விவசாய சம்பந்தப்பட்ட கிராமாந்திர உர அபிவிருத்தி, மரங்கள் வளர்ப்பு ஆகிய இரண்டு காரியங்களும் கிராமாந்திரங்களில் பெரிய அளவில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. விவசாய அபிவிருத்தியின் மூலாதாரத் திட்ட வேலைகளான இவற்றை நிறைவேற்றுவதற்கு, பஞ்சாயத்துக்களுக்கு நிதிவசதியளிக்கும் அரசாங்கத் திட்டங்களிருக்கின்றன. இந்த அடிப்படையான அம்சங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதைப் பொறுத்தே நமது விவசாய முன்னேற்றத்தை நிச்சயிக்க முடியும்.

பஞ்சாயத்துக் கூட்டாட்சி (யூனியன்)

கிராமப் பஞ்சாயத்துகளின் கூட்டாட்சி அமைப்பு குறிப்பிட்ட வட்டாரத்தின் பிரதிநிதித்துவ உறுப்பாக விளங்குகிறது. ஆரம்பக் கல்வியின் முழுப் பொறுப்பையும் யூனியன் ஏற்கிறது. தாய்சேய் நலம், குடும்பக் கட்டுப்பாடு, வைத்திய வசதிகள், ரோடு பராமரிப்பு போன்ற அம்சங்கள் யூனியனிடம் ஒப்படைக்கப்படுகின்றன. தற்போது அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டு வரும் வட்டார வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பும் ஏஜென்ஸி முறையில் கூட்டாட்சியிடம் ஒப்படைக்கப்படுகிறது. யூனியனுக்கு பிரதேச வரி விதிக்கும் உரிமையின் மூலமும், யூனியன் பிரதேச நிலவரி மொத்தம்—ஜனத்தொகை—பிரதேசத்தின் முன்னேற்ற மதிப்பீடு இவைகளின் அடிப்படை விகிதத்தில் மாநில அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் மானியங்கள் மூலமும் நிதிவசதி கிடைக்கிறது.

“பொருளாதார சமத்துவம் என்பதன் பொருள் எல்லோருக்கும் சரிசமமாகப் பொருள் கொடுப்பது என்பதன்று. எல்லோர்க்கும் இன்றியமையாத தேவைகளுக்குப் போதுமான பொருள் கொடுப்பது என்பதேயாகும்.”

மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள்

மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்துக் கூட்டாட்சிகளை மையப் படுத்தும் உறுப்பாக அமைகிறது மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள். இந்த ஸ்தாபனங்கள் எல்லாம் ஜனநாயக முறையில் உருவாகி, ஜனநாயக வழியிலே செயல்படும் ஸ்தாபனங்களாகும். உலகிலேயே ஜனநாயக அமைப்பில் செயல்படும் தேசங்களில் மிகப்பெரியது நம் நாடு. ஜன நாயக வழி முறைகளின் நிதானமான அபிவிருத்திகள் காரணமாக ஜனநாயகத்தை அலட்சியப்படுத்த முடியாது. ஜனநாயக சுதந்திரமே இந்த நாட்டின் புராதீன ஆட்சி முறை. **இந்த ஜனநாயக ஆட்சி முறையை, தேசத்தின் உயிர் நாடியான கிராமங்களில் மலரச் செய்வதே, புதியப் பஞ்சாயத்து அமைப்பின் அடிப்படை நோக்கமாகும்.**

சமுதாய உணர்ச்சி வளரவேண்டும்

பல அரசியல் கட்சிகளின் சம்மதத்தோடும், வேண்டிய முன் தயாரிப்புகளோடும் அமுலாக்கப்படவிருக்கும் இப் புதிய மக்களாட்சி அமைப்பை வெற்றிகரமாக செயல்படுத் தும் பொறுப்பு மக்களையும், மக்கள் தலைவர்களையும் சார்ந்ததாகும், ஜாதி, மற்றும் பிரிவு மனப்பான்மை களுக்கு இடங்கொடுக்காமல், சமுதாய உணர்ச்சியோடு பிரச்னைகளை அணுகுவதே இன்றையத் தேவையாயிருக் கிறது. ஜாதி, மற்றும் பிளவு மனப்பான்மைகள் மானிட சமுதாய உணர்ச்சி என்ற பெரும் நீரோட்டத்தின்முன் வெகு அற்பமான தடங்கல்களே. பொருளாதார ரீதி யிலும் சமுதாய உணர்ச்சி நம்மிடையே வளர்ந்தாக வேண்டும். சமதர்மக் கொள்கைகளை அரசாங்கம் படிப் படியாக நிறைவேற்றி வந்தாலும், தனிப்பட்டோரின் உரிமைகளுக்கும் சிறந்த பாதுகாப்பு அளித்தே இருக்கிறார் கள். தனிப்பட்டோரின் நலன்களும், உரிமைகளும் சமுதாயத்தைப் பாதிப்பனவாகயிருக்க முடியாது.

பிரதான வயலும், சமுதாயமும்

நெல் நாற்றங்காலில் உரம் குவியலாக விழுந்த இடத் தில் முளைத்த நாற்றுக்கள், நாற்றங்காலின் இதர இடங் களின் முளைத்த நாற்றுக்களைவிட அதிகக் கொழுமையாக வும், உயர்ந்தும் வளர்ந்திருக்கின்றன. நாற்றங்காலின் சகல நாற்றுக்களும் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் பிர தான வயலில் எடுத்து நடப்படுவதன் மூலமே பக்கத் தூரடித்து, வீரியமாக வளர்ந்து சிறந்த பலனையும் அளிக் கின்றன. நாற்றங்காலிலேயே எந்த நாற்றையும் நீடித்து வளர விடுவதன் மூலம் என்ன பலனை எதிர்ப்பார்க்க முடியும்? எவ்வித பலனும் கிடைக்காது! நாற்றுக் களின் செழிப்பான வாழ்வுக்கு பிரதான வயல் எவ்வளவு முக்கியத்துவம் படைத்ததோ, அதே போன்று தனிப்பட் டோரின் நல்நிலைக்கு சமுதாயம் முக்கியத்துவம் படைத்த தாகும்.

நமது காணிக்கை

இந்திய கிராம வாழ்க்கையை நன்கு அறிந்து "கிராமங் களே இந்தியாவின் உயிர் நாடி" என நம்மை அறிவுறுத் தியும், தனது வாழ்க்கையை கிராம அடிப்படையில் நடத்தியும், கிராம ராஜ்யமே தனது தேசீய சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய நோக்கமாகவும் கொண்ட நம் தேசப் பிதாவுக்கு இந்திய கிராம சமுதாயம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது. **கிராம ராஜ்ய அடிப்படையில் அமைந்திருக்கும் புதியப் பஞ்சாயத்து சட்டத்தை தேசப் பிதாவின் பிறந்த தினமான அக்டோபர் 2-ந் தேதி மாநிலத்தின் 75 வட்டார வளர்ச்சிப் பகுதிகளில் அமுல் செய்வதன் மூலம், இம் மாநிலம் மறைந்த நம் மாபெரும் தலைவருக்கு, தனது சிறிய காணிக்கையைச் செலுத்தி அஞ்சலி செய்கிறது.**

[தூத்துக்குடி வட்டார வளர்ச்சிப் பகுதியினர் சார்பில் இக்கட்டுரை "கிராம நலத்திற்கு" அனுப்பப்பட்டது]

30—8=60-ல் மேட்டூர் அணையில் மலையைக் குடைந்து தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்தை முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்.









சென்னையில் குடியரசுத் தலைவர்

1—3. சட்டப் பேரவை உறுப்பினர்கள் அளித்த விருந்து.

4. குடியரசுத் தலைவர் அளித்த விருந்தில்.

5—6 கவர்னர் அவர்க அளித்த விருந்து.

7. கிண்டி தொழில் பேட் டையைப் பார்வையிடுதல்.

கோவையில்

1. அவினாசிலிங்கம் குடும்ப இயல் கல்லூரியில் குடும்ப இயலில் M.Sc. பிரிவைத் துவக்கி வைத்தார்.

2—4. பெரியநாயக்கன் பாளையம் ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில்.







5—6. மேட்டுப்பாளையத்தில் உள்ள செயற்கைக் கற்கள் (Gem) தயாரிக்கும் தொழிற்சாலையைப் பார்வையிடுகிறார்.

சேலத்தில்.

1. காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். விஜயராகவாச்சாரியார் குடும்பத்துடன்.

2—3. சேலத்தில் பொதுக்கூட்டம்.





4. தியாகிகளின் நினைவுச்சின்னத்தின் மீது மலர்மாலையிடுதல்.

5—6. மேட்டூர் அணையைப் பார்வையிடுதல்.



வேலூரில்

1—3. கிறித்துவ வைத்தியக் கல்லூரி விழாவில்.

4—5. பள்ளி அபிவிருத்தி மகாநாடு.

6—7. வக்கீல்கள் சங்கத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில்.





கிராம நலனில் ஒரு புதிய திருப்பம்.

திரு. கே. பி. முத்துசாமி.

[தலைவர், காஞ்சிக்கோவில் பஞ்சாயத்து, கோவை மாவட்ட அபிவிருத்தி மன்ற அங்கத்தினர்.]

["ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற தாரக மந்திரம் இந்த நாட்டின் லட்சக்கணக்கான கிராமங்களின் நல்வாழ்வுக்கு அடிப்படை. நமது கிராமங்களிலே ஏற்பட்டுள்ள ஒரு புது விழிப்புணர்ச்சியையும், புதியப் பஞ்சாயத்துச் சட்டத்தின் அடிப்படை அம்சத்தையும், ஒற்றுமையின் அவசியத்தையும் இக் கட்டுரை விளக்குகிறது.... —ஆசிரியர்]

நாடு நலம் பெற, மக்கள் நல் வாழ்வு வாழ, நமது பாரத அரசாங்கமும், மாநில அரசாங்கமும் பற்பலத் திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகின்றனர். சுதந்திரம் பெற்ற பின்னர், நம் நாட்டின் முன்னேற்றம் வினைய நாட்டினரை வெகுவாக கவர்ந்திருக்கிறது. ஜனநாயக நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டால் அது சரிவர நடக்குமா? திட்டத்தை நிறை வேற்ற மக்கள் முன்வருவார்களா? என்ற ஐயப்பாடும் வினவும் ஆரம்ப காலத்தில் எழுந்தன. அவைகளைப் பொய்ப்பிக்கும் முறையில், நமது நாட்டு மக்கள், நாங்கள் உரிமைக்காக மட்டும் போராட்டம் நடத்தவில்லை, எங்களுக்கும் கடமை உணர்ச்சி இருக்கிறது என்பகைக்காட்டி அரசாங்கத்தின் திட்டங்கள் யாவும் மக்கள் திட்டமே என்பதை நிரூபித்து விட்டார்கள். குறிப்பாக, சென்னை மாநில மக்கள் எதிலும் சோர்வு காட்டவில்லை. பட்டி தொட்டிகளிலெல்லாம் திட்டத்தின் வேகம், மக்களை வெகுவாக கவர்ந்ததின் காரணமாக, இன்று எந்த கிராமத்தை நோக்கினும் அவை ஒன்றேடொன்று போட்டி போட்டுக்கொண்டு திட்டத்தை நிறைவேற்றி வருவதைக் காண்கிறோம்.

பல்வேறு துறைகளிலும் வளம் பெருக..

திட்டத்தில் அரசாங்கம் செய்ய வேண்டிய பணிகளை செவ்வனே செய்ததின் காரணமாக, எங்கு பார்த்தாலும் நீர்வளம், நிலவளம், பெரும் தொழில்கள் நல்ல முறையில் பெருகி வந்ததின் காரணமாக, இன்று நாடு ஒரு நிம்மதியான நிலையை அடைந்துள்ளது எனத் தைரியமாக கூறலாம். கிராம மக்களின் வளர்ச்சி கருதி, அரசினரால் வகுக்கப்பட்ட சமுதாய நலத்திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம், தல அபிவிருத்தித் திட்டம் இவைகள் எதிர்பார்த்ததற்கு மேலாக, நம் மாநிலத்தில் வெற்றி பெற்றிருக்கிறது என்பதைப் பெருமையுடன் கூற முடியும்.

இன்று கிராம மக்களிடையே பெரும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தங்கள் கிராமம், பல துறைகளிலும் முன்னேற வேண்டும் என்ற ஆர்வம், அவர்களிடையே தலை தூக்கி நிற்கிறது. விவசாயத் துறையிலும், கைத்தொழில் துறையிலும், அபிவிருத்தித் துறையிலும், மக்கள் நல்ல ஆர்வத்துடன் பணியாற்றி வருகின்றனர்.

கிராமங்களில், சமீபகாலம் வரை, பஞ்சாயத்துக்கள் சரியான உற்சாகமின்றி செயல்பட்டு வந்தன. ஏதோ கிராமத்தில் கிணறுகள் வெட்டினோம், ரோடுகள் போட்டோம் என்ற முறையில் மந்த கதியில் வேலை நடைபெற்று வந்தது. இதற்காகப் பஞ்சாயத்துக்களை குறை சொல்வதற்கில்லை. நாடு அடிமைப்பட்டுக்கிடந்த காலத்தில், பெயரளவுக்கு கிராமப் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி, மக்களுக்கும் சில அதிகாரங்கள் இருப்பது போல் காட்டி வந்தார்கள். அன்றையப் பஞ்சாயத்தில் உறுப்பினர்களாகவோ, தலைவராவோ இருந்தவர்கள், அதை ஒரு பெருமையாகக் கருதி வந்தனரே தவிர, கிராமத்திற்கு சேவை செய்ய வேண்டுமென்ற அக்கறை இருக்கவில்லை. அன்றிருந்த சூழ் நிலையும் அவ்வாறே.

கிராமங்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுவிட்டது

1958-ஆம் வருஷத்திய பஞ்சாயத்துச் சட்டம் சட்டசபையில் அங்கீகாரம் பெற்ற நாளிலிருந்து, கிராமப் பஞ்சாயத்துக்கு ஒரு பூரண சோபை வந்துவிட்டது. புதிய சட்டத்தின் காரணமாக, மக்களிடையே ஒரு புதிய தெம்பும், புத்துணர்ச்சியும் ஏற்பட்டுவிட்டது. சட்டம் வந்த பின், நடந்த பஞ்சாயத்து தேர்தல்களே இதற்குச் சான்றாகும்.

பஞ்சாயத்துத் தேர்தல்களில் கலந்து கொண்டவர்கள், பெருமைக்காகவோ, அல்லது பட்டம், பதவி, ஆசைக்காகவோ வந்தவர்களில்லை. புதியச் சட்டத்தின் மூலம்

மக்களுக்கும், கிராம முன்னேற்றத்திற்கும் சேவை செய்ய ஏராளமான வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்தினால்தான், எங்கு பார்த்தாலும் போட்டி போட்டுக் கொண்டு முன் வந்தனரே தவிர, வேறு காரணங்கள் எதுவும் கிடையாது. மக்கள் தேர்தலிலும் சோடையாக நடந்துகொள்ளவில்லை. சேவா உணர்ச்சி கொண்டவர்களை, தகுதியானவர்களையே அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்நிலை கிராம மக்களின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது எனலாம்.

புதியச் சட்டத்தின் மூலம் பல புதிய பொறுப்புக்கள் ஏற்பட்டுள்ளதை நல்ல முறையில் நிறைவேற்றுவதோடு, அரசாங்கத்தின் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றும் அஸ்திவாரமுமாக பஞ்சாயத்து நிறுவனங்கள் உள்ளன. இவை வரவேற்கப்பட வேண்டிய அம்சமாகும்.

"கிராமங்கள் செழித்தால்தான் நாடு செழிக்கும்" என்ற தத்துவத்தை, மகாத்மா காந்தியடிகள் அடிக்கடி உபதேசம் செய்து வந்துள்ளார்கள். ஒவ்வொரு கிராமமும் கிராமராஜ்யமாக திகழவேண்டும், தன்னிறைவு பெற்ற கிராமமாக மிளிரவேண்டும் என்பதே மகாத்மா காந்தியடிகள் கண்ட கனவாகும். **காந்தியடிகளின் கனவை நனவாக்கும் முறையில் இப் புதிய பஞ்சாயத்துச் சட்டம் இருக்கிறது.**

பஞ்சாயத்து நிறுவனங்கள் செய்யவேண்டிய வேலைகள்

புதியச் சட்டத்தின் கருத்துக்களைப் புரிந்து கொண்டு, ஒவ்வொரு பஞ்சாயத்தும் செயலாற்றினால் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காண முடியும். விவசாய அபிவிருத்திக்காக, பஞ்சாயத்து செய்ய வேண்டிய வேலைகள் ஏராளமாக இருக்கின்றன. பொறுக்கு விதைகள் தயாரித்தல், நவீன விவசாயக் கருவிகள் வாங்கிக் கொடுத்தல், இயற்கை உரம் தயார் செய்தல், செயற்கை உரம் வரவழைத்துக் கொடுத்தல், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வாங்கிக் கொடுத்தல், விவசாயப் பொருள்களை கூட்டுறவு முறையில் நல்ல விலைக்கு விற்றுக் கொடுத்தல் போன்ற காரியங்களில், தீவிரமாகச் செயலாற்ற வேண்டும். மண் வளப் பாதுகாப்பு, குடிமராமத்து போன்ற வேலைகளிலும் தீவிரமான கவனம் செலுத்தப்படவேண்டும்.

நம் நாட்டின் பழம் பெரும் கிராமக் கைத்தொழில்கள் வெகுவாக மறைந்துவிட்டன. அவைகளுக்கு புத்துணர்வு கொடுத்து, வேலையற்ற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும் நிறைய சந்தர்ப்பம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தையும் நல்ல முறையில் நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மக்களின் அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, குடியிருப்பு இவைகள் தவிர, கிராம முன்னேற்றத்திலும் முன்பிருந்ததைவிட அதிக நாட்டம்கொள்ள வழி வகைகள் புதியச் சட்டத்தின் மூலம் செய்யப்பட்டிருக்கிறது. சட்டத்தின் பீடிகையில் குறிப்பிட்டுள்ளது போல "ஜனப் பெருக்கத்திற்கு ஏற்றவாறு உணவு உற்பத்தியைப் பெருக்குவதும், வளர்ந்து வரும் ஜனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதையும் (குடும்பக் கட்டுப்பாடுத் திட்டமே) முக்கிய குறிக்கோள்களாகக்கொண்டு பணியாற்ற வேண்டும்."

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியனும் சட்டத்தின் அடிப்படையில் செம்மையான முறையில் செயலாற்றினால், காந்தியடிகள் கண்ட கனவு நனவாகும். சுதந்திரத்தின் உண்மையான பலனை நாம் அடைந்தவர்களாவோம். **இவைகளுக்கெல்லாம் அடிப்படையாக வேண்டியது ஒற்றுமை உணர்ச்சிதான்.** ஒற்றுமைதான் மிகவும் அவசியம். நமது மாநில இணை அபிவிருத்திக் கமிஷனர் திரு **கோ. வேங்கிடாசலபதி** அவர்கள் எங்கு சென்றாலும், "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற தாரக மந்திரத்தைப் பரப்பி வருகிறார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கென கட்டப்படும் புதிய கட்டிடங்களில், எல்லோரும் பார்க்கும்படியான இடத்தில், மேற்சொன்ன தாரக மந்திரம் சலவைக் கற்களில், கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் சொல்வதில் பல தத்துவங்களும், பல உண்மைகளும் அடங்கியிருக்கிறது.

கிராமங்களில் சாதிப் பூசல், சமயப் பூசல், அறியாமை, தீண்டாமை என்ற சமூக தீய சக்திகள் ஒழிய வேண்டும். சமுதாயத்தில் உள்ள பொறாமை, பகைமை உணர்ச்சி, பாகுபாடு இவைகளெல்லாம் களையப்பட்டால் தான் கிராமங்கள் முன்னேற முடியும். இந்தத் துறையில் பணியாற்ற வேண்டுமானால், ஒற்றுமை உணர்ச்சி, சகோதர மனப்பான்மை, அன்பு, எல்லோரும் ஓர் குலம் என்ற எண்ணம் முதலியவை கிராம மக்களிடையே மேலும் மேலும் பல்கிப் பெருக வேண்டும்.

பஞ்சாயத்தில் பொறுப்பேற்றுள்ளவர்கள், சட்டத்தின் அடிப்படையை மனத்தில்கொண்டு, சமுதாயத்தில் ஊறிக் கிடக்கும் தீயப் பழக்க வழக்கங்களைப் போக்கி அன்பு, அஹிம்சை, சத்தியம் என்ற முப்பெரும் மந்திரங்களைத் துணைக்கொண்டு, செயலாற்ற வேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற அடிப்படையில் "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை" என்ற குறிக்கோளோடு பணி புரிய எல்லா கிராமப் பஞ்சாயத்து தலைவர்களும், உறுப்பினர்களும் முன் வரவேண்டும். அப்பொழுது தான் பாலைவனங்களாகக் கிடக்கும் கிராமங்களை சோலை வனங்களாக மாற்றியமைக்க முடியும்.

" மனிதனுக்கும் மிருகத்துக்குமுள்ள வேறுபாடு மனிதனுடைய சமூக உணர்ச்சியே என்பதை நாம் மறக்கலாகாது. சுதந்திரமாய் வாழ்வதற்கான உரிமை உள்ளதுபோலவே சார்ந்து வாழ்வதற்கான கடமையும் உண்டு."

குடும்பக் கட்டுப்பாடு :

அரசாங்க ஆணையின் சுருக்கம் :

குடும்பக் கட்டுப்பாடு

அறுவை சிகிச்சை முறைகளை எல்லாக் கிராமங்களிலும் நகரங்களிலும் விஸ்தரிக்க அரசாங்கம் முடிவு

சுகாதாரத் துறையில் 22–12–1959-ல் வெளியான 3629-ம் எண்ணிட்ட அரசாங்க ஆணையில், அரசாங்கம், தேசிய வளர்ச்சித் திட்டப்பணி நடைபெற்று வருகிற 207 வளர்ச்சி வட்டாரங்களில் ஒவ்வொன்றிலுமுள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட 10 கிராமங்களில் அறுவை சிகிச்சை முறைகளை பிரசித்தம் செய்யத் தீவிரத் திட்டத்தை விஸ்தரிக்க அனுமதி கொடுத்துள்ளது. 1960–ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 12-ஆம் தேதியில் நடைபெற்ற குடும்பக் கட்டுப் பாடு போர்டின் கூட்டத்தில் வெளியூர்களில் சகல இடங்களி லும் இத் தீவிரத் திட்டத்தினை விஸ்தரிக்கவேண்டுமெனச் சிபார்சு செய்தது. சென்னையில் 18–4–1960 முதல் 25–5–1960 வரை நடைபெற்ற பஞ்சாயத்து அபிவிருத்திக் கருத்தரங்குகளில் சகல கிராமங்களிலும் இத்திட்டத்தினை விஸ்தரிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இம் மாநிலத்தி லுள்ள சகல கிராமாந்திரப் பிரதேசங்களிலும் இத் திட்டம் விஸ்தரிக்கப்படவேண்டுமென்பதே இக் கூட்டத்திலே ஏற்பட்ட ஒருமைப்பட்ட கருத்தாகும். அரசாங்கம் இத் திட்டத்தினை நன்கு பரிசீலித்து, மேலே சொல்லிய அரசாங்க உத்தரவில் அனுமதிக்கப்பட்ட இத் தீவிரத் திட்டத்தினை, வெளியூரில் சகல கிராமங்களிலும் டவுன் களிலும் விஸ்தரிக்க வேண்டுமென்று முடிவு செய்தது.

2. சுகாதாரத் துறையில் 22–12–1959 அன்று வெளி யான 3629-ம் எண் அரசாங்க ஆணையிலுள்ள உத்தரவு களை ரத்து செய்து அதற்குப் பதிலாக, அரசாங்கத்தார் வெளியூரில் சகல கிராமங்களுக்கும் டவுன்களுக்கும் அறுவை சிகிச்சை முறைகளை பிரசித்தம் செய்ய முடியும், தீவிரத் திட்டத்தினை விஸ்தரிப்பதற்கு அனுமதி தந்துள் ளது. கருத்தடை இலக்கு (1,00,000) ஒரு லட்சமாகும்.

3. இத் தீவிரத் திட்டம் சகல நபர்களுக்கும் அவர்கள் வருமானம் எதுவாயிருந்தபோதிலும் பயன்படும். ஆண் கள் விஷயத்தில் 50 வயதிற்கு மேற்படாமலும் பெண்கள் விஷயத்தில் 24 வயதிற்கு குறையாமலிருக்கவேண்டும். ஒவ்வொருவர் விஷயத்திலும் மூன்று குழந்தைகளுக்குக் குறையாமலிருக்கவேண்டும்.

4. இவ் வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு I-ல் குறிப்பிட்ட மருத்துவ மனைகள் எதிலாவது, கருத்தடை அறுவை (ஆண்கள் விஷயத்தில் ஆண் உறுப்புத் தையல் முறையும் பெண்கள் விஷயத்தில் பெண் உறுப்புத் தையல் முறையும்) செய்துகொள்ளும் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒவ்வொருவருக்கும், அவர் வசிக்குமிடம் எதுவா யிருந்தபோதிலும், ரூ. 30 (முப்பது ரூபாய் மட்டும்) சகாயப்படி கொடுக்கப்படுவதற்கு இவ் வரசாங்கம் அனுமதி யளித்துள்ளது. இந்தக் குறுகிய காலத்தில் ஷ நபருக்கு ஏற்படும் நஷ்டத் தொகைக்கு ஈடு செய்யவும் அறுவை செய்துகொள்ளும் ஷ நபருக்குத் தற்செயலாக ஏற்படும் செலவினங்களுக்கும் இத்தொகை அனுமதிக்கப்பட் டுள்ளது.

5. ஆண் உறுப்புத் தையல் அறுவை செய்து கொள்ளும் அரசாங்கப் பணியாளர்களுக்கு அறுவை முடிந்து ஓய்வு எடுத்துக்கொள்ளும் வகையில் ஆறு வேலை நாட்களுக்கு மேற்படாமல் விசேஷ காஷுவல் லீவுக்கு அரசாங்கத்தார் அனுமதித்துள்ளார்கள். உதவி பெற்ற பள்ளி நிறுவனங்களிலும் தல ஸ்தாபனங்களிலும் அந்தந்த அதிகாரிகள் இதைப் போன்ற காஷுவல் லீவ் வசதிகளை பணியாளர்களுக்கு அனுமதித்துள்ளனர்.

6. இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் விசேஷ அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இதனை மக்களிடையே பிரசித்தஞ் செய்ய வேண்டுமென்றும் சகல கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களும் சகல நகராட்சி ஆணையர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்கள் பிரச்சாரம் செய்வதுடன், மேலே 3-வது பாராவில் சொல்லிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் நபர்களை அறுவை சிகிச்சை செய்துகொள்ளுமாறு I-வது இணைப்பில் குறிப் பிட்டபடி அருகிலுள்ள மருத்துவ மனைக்கு அனுப்பவும் வேண்டும்.

7. அறுவை சிகிச்சை செய்துகொள்ள விரும்புகிற தேர்ந் தெடுக்கப்பட்ட நபர் ஒவ்வொருவருக்கும் ஷ நபர் தாம்

வசிக்கிற கிராமத்திலிருந்து மிக அருகிலுள்ள மருத்துவ மனைக்குப் போய் வருவதற்கு வேண்டிய இலவச போக்கு வரத்து வசதிகளைப் பஞ்சாயத்துத் தலைவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டும். இத் திட்டத்தினைப் பிரசித்தஞ் செய்யவும் நிறைவேற்றுவதற்கும் தையல் முறை அறுவை செய்து கொள்கிற ஒவ்வொரு நபர் விஷயத்திலும், உண்மையாக ஏற்பட்ட வண்டிச் செலவுகளுக்கும், அவசியமெனக் கருதிய தற்செயலாக ஏற்படுகிற செலவினங்களுக்கும் பஞ்சாயத்து கொடுப்பதற்கு வகை செய்யும் முறையில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 10 (பத்து ரூபாய் மட்டும்) உதவித் தொகை கொடுக்கப்படுவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்துள்ளது.

8. பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கப்படும் ரூ. 10 மானியமும், தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு 4-பாராவில் சொல்லிய வண்ணம் கொடுக்கப்படுகிற ரூ. 30 சகாயப் படியும் அறுவை நடைபெற்ற அன்றைய தினமே, மருத்துவ மனையின் தலைவரால் கொடுக்கப்படும். இதற்கென்று வரையறை செய்யப்பட்டுள்ள சான்றிதழ் பூர்த்திச் செய்து கொடுக்கப்பட வேண்டும். சகாயப் படிகளும் மானியத் தொகையும், இச் செலவினத்தை ஈடுகட்டுவதற்காக I-வது இணைப்பில் குறிப்பிட்டுள்ள மருத்துவ மனைத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் சுகாதாரத் துறையில் 1960-ம் வருஷம் மே மாதம் 25-ம் தேதியில் வெளியான 1400 அரசாங்க எண் உள்ள ஆணைப்படி அனுமதிக்கப்பட்ட ரூ. 1,000 (ஆயிரம் ரூபாய் மட்டும்) யிலிருந்து அறுவை நடைபெறும் மருத்துவமனைத் தலைவர்களால் எடுத்துக் கொடுக்கப்படும்.

9. இத் திட்டத்தின் விவரங்களை நன்குவிளக்கி அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது, அவரவர் விசாரணை அதிகாரத்திலுள்ள பஞ்சாயத்துக்களுக்கும், முனிசிபல் கவுன்சில்களுக்கும், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், வட்டார ரெவனியு அதிகாரிகள் ஆகியோருடைய இன்றியமையா கடமையாகும்.

10. இணைப்பு I-ல் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவமனைத் தலைவர்கள் இப்படிச் செய்யப்பட்ட அறுவை சிகிச்சைகள் விவரங்களை மாதந்தோறும் மாவட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். அந்த ரிட்டர்ன்களை எல்லாம் தொகுத்து ஒரு மாதாந்திர ரிட்டர்னை அவர் மருத்துவத்துறை இயக்குனருக்கு அனுப்புவார். இப்படி அனுப்பப்பட்ட எல்லா அறிக்கைகளையும் தொகுத்து மருத்துவத்துறை இயக்குனர் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார். அந்தக் காலஅளவில் இந்தத் திட்டத்தைப் பரப்பும் வகையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப்பற்றியும் அவர் தன்னுடைய குறிப்புகளையும் அரசாங்கத்திற்கு அனுப்புவார் :

இணைப்பு I

1 வட ஆற்காடு மாவட்டம்—
- (a) அரசாங்க தலைமை ஆஸ்பத்திரி, வேலூர்.
- (b) அரசாங்க ஆஸ்பத்திரி, திருவண்ணாமலை.

2 தென் ஆற்காடு மாவட்டம்—
- (a) அரசாங்க தலைமை ஆஸ்பத்திரி, கடலூர்.
- (b) அரசாங்க ஆஸ்பத்திரி, விழுப்புரம்.

3 செங்கல்பட்டு மாவட்டம்—
அரசாங்க தலைமை ஆஸ்பத்திரி, செங்கல்பட்டு.

4 சேலம் மாவட்டம்—
- (a) அரசாங்க தலைமை ஆஸ்பத்திரி, சேலம்.
- (b) அரசாங்க ஆஸ்பத்திரி, கிருஷ்ணகிரி.

5 கோயமுத்தூர் மாவட்டம்—
- (a) அரசாங்க தலைமை ஆஸ்பத்திரி, கோயமுத்தூர்.
- (b) அரசாங்க ஆஸ்பத்திரி, ஈரோடு.

6 திருச்சிராப்பள்ளி மாவட்டம்—
- (a) அரசாங்க தலைமை ஆஸ்பத்திரி, திருச்சிராப்பள்ளி.
- (b) அரசாங்க ஆஸ்பத்திரி, கரூர்.

7 தஞ்சாவூர் மாவட்டம்—
- (a) அரசாங்க தலைமை ஆஸ்பத்திரி, தஞ்சாவூர்.
- (b) அரசாங்க ஆஸ்பத்திரி, நாகப்பட்டிணம்.

8 திருநெல்வேலி மாவட்டம்—
- (a) அரசாங்க தலைமை ஆஸ்பத்திரி, திருநெல்வேலி.
- (b) அரசாங்க ஆஸ்பத்திரி, தூத்துக்குடி.

9 ராமநாதபுரம் மாவட்டம்—
- (a) அரசாங்க தலைமை ஆஸ்பத்திரி, ராமநாதபுரம்.
- (b) அரசாங்க ஆஸ்பத்திரி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

10 மதுரை மாவட்டம்—
- (a) எர்ஸ்கின் ஆஸ்பத்திரி, மதுரை.
- (b) அரசாங்க ஆஸ்பத்திரி, திண்டுக்கல்.

11 நீலகிரி மாவட்டம்—
அரசாங்க தலைமை ஆஸ்பத்திரி, உதகமண்டலம்.

12 கன்யாகுமரி மாவட்டம்—
அரசாங்க ஆஸ்பத்திரி, நாகர்கோயில்.

(கல்வி, பொதுச் சுகாதாரத் துறை, 17-8-60 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2,101-ன் சுருக்கம்.)

"எண்ணம், செயல் இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்ததாக இருந்தால்தான், வாழ்வு இயற்கையாகவும் பூரணமாகவும் நடைபெறும்."

இந்தியாவின்......... இதய ஒலி...

எச். டி. மாளவியா

["A. I. C. C. Economic Review" என்ற பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிய திரு. எச். டி. மாளவியா அவர்கள் "Village Panchayats in India" என்று ஆங்கிலத்தில் ஓர் அற்புதமான நூலை எழுதியுள்ளார்கள். பஞ்சாயத்து ஆட்சி முறையில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல் இது. இந்த நாட்டின் கிராமப் பஞ்சாயத்து ஆட்சி முறை பற்றி தெளிவான முறையில் ஆராய்ச்சி செய்திருக்கிறர் ஆசிரியர் மாளவியா. அந்த நூலின் கடைசி அத்தியாயத்தின் சாரத்தை பெரு மகிழ்ச்சியுடன் இங்கே வெளியிட்டுள்ளோம்:

—ஆசிரியர்.]

பொச்சரிப்பும் பொருமையும் நிறைந்த இந்த உலகிற்கு **காந்தி மகான்** ஓர் அற்புதமான தாரக மந்திரத்தை அளித்துள்ளார். அது என்ன தெரியுமா?

"நான் உங்களுக்கு ஒரு தாரக மந்திரத்தை அளிக்கிறேன். உங்களுடைய மனத்தில் எப்பொழுது சஞ்சலமும், பொச்சரிப்பும், பொருமையும் ஏற்படுகின்றனவோ, எப்பொழுது உங்களிடையே சுயநல எண்ணமும், தான் என்ற அகந்தையும் தலை தூக்குகிறதோ, அப்பொழுதெல்லாம் கீழ்க்கண்ட ஆத்ம பரிசோதனையை உங்களுக்கு நீங்களே செய்து கொள்ளுங்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், நீங்கள் இந்த உலகில் சந்தித்த மனிதர்களிலேயே மிகவும் ஏழ்மையும், பலவீனமுமான மனிதனின் சோகம் ததும்பிக் காணும் முகத்தை உங்கள் கண் முன்னே கொண்டு வாருங்கள். நீங்கள் செய்கின்ற எந்தக் காரியமும், சமுதாயத்தின் அடித்தளத்திலே கிடந்து உழலும் அந்த ஏழை எளிய பாமர மகனின் வாழ்க்கையை உயர்த்த எந்த அளவிலாவது பயன்படுகிறதா என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். சுருக்கமாகச் சொல்லப்போனல், பசி, பசி என்று அவலக்குரல் எழுப்பி, அறியாமை இருளிலே கிடந்து உழலும் லட்சக்கணக்கான தரித்திர நாராயணர்களின் வாழ்க்கையைப் பீடித்து அலைக்கழிக்கும் இந்தக் கோரப்பிடிகளை விலக்கி, அவர்களை முழுமனிதர்களாக வாழவைக்கும் முறையில் உங்கள் செயல் பயன்படுகிறதா என்று பாருங்கள். அப்படி ஆத்ம பரிசோதனை செய்து பார்த்தீர்களேயானல், உங்களிடையே தோன்றும் பொருமை, சுயநலம், சஞ்சல உணர்ச்சி எல்லாம் ஆதவனைக் கண்ட பனிபோல் அகன்றுவிடும்."

மகாத்மா கண்ட கிராம மகன்

குமரி முதல் காஷ்மீரம் வரை பரந்து கிடக்கும் பல்லாயிரக்கணக்கான கிராமங்களிலே, இப்படிப்பட்ட லட்சக்கணக்கான தரித்திர நாராயணர்களை **காந்தியடிகள்** கண்ணாரக் கண்டார். அவர் அவர்களைப் பார்த்ததுபோல், அவர்களுடைய வறுமையை, அறியாமையை அவர் உணர்ந்தது போல், வேறு ஒருவருமே உணரவில்லை. அதனுல்தான், அந்த லட்சக்கணக்கான ஏழை எளிய மக்களின் கண்களிலே வழிந்தோடும் இரத்தக்கண்ணீரை துடைத்தெறிய உடனே அவர் முன்வந்தார். அந்த தரித்திர நாராயணர்களில் அவரும் ஒருவரானர். அவர்களுடைய வாழ்க்கைக்கேற்ப தன் வாழ்க்கையையும் காந்தி அடிகள் மாற்றி அமைத்துக்கொண்டார். நிர்மலமான மனது படைத்த குடிசைவாழ் ஏழைகளோடு இரண்டறக் கலந்துவிட்ட அவர், மகத்தான மனிதராக, மகாத்மாவாக, புனர்ஜன்மம் பெற்று வெளியே வந்தார்.

கேடு கெட்ட, சீர்குலைந்துபோன வாழ்க்கை நடத்தும், துயரமும் துன்பமும் வதைத்தெடுக்கும் அந்த அப்பாவி கிராம மக்களை மகாத்மா கண்டது போல், **ஜவஹர்லால் நேருவும்** கண்டார். இந்தியாவின் ஜீவநாடியான விவசாயப் பெருங்குடி மகனின் அவல நிலை அவர் உள்ளத்தைத் தொட்டது. அந்த விவசாயியின் தனிப்பெரும் பிரதிநிதியான மகாத்மாவின் அடிச்சுவட்டில் நேருவும் சென்றுர். இந்த உணர்வுதான் நேருவை ஒரு புதுமனிதராக உருவாக்கியது. இந்திய மக்களின் இதயம் கவர்ந்த இணையற்ற மனிதராக அவரை மாற்றி அமைத்தது. நவ இந்தியாவை நிருமாணிக்கும் தலையாயச் சிற்பியாக அவரைப் பரிணமிக்க வைத்தது.

இந்திய விவசாயியின் அன்றைய மேம்பாடான நிலை

உண்மையிலேயே, இந்திய விவசாயி அப்படிப்பட்ட தன்மை படைத்தவன்தான். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அவன் கிராமத்திலேயே வாழ்ந்து வருகிறன். மனநிம்மதியும், மகிழ்ச்சியும் அன்று, அவன் வாழ்விலே ததும்பிக் கிடந்தது. அவன் வாழ்க்கை புன்னகைப் பூங்கா

வாக பூத்துக் குலுங்கியது. அவன் தன்னுடைய அதியற்புத மேதாவிலாசத்தினுல் **பஞ்சாயத்து ஆட்சி முறையை உருவாக்கி நாட்டை திறம்பட ஆட்சி செய்து வந்தான்.** மகிழ்ச்சி, செழிப்பு, மன நிம்மதி அவனிடம் காணப்பட்டன. முழு மனிதனுக அவன் வாழ்ந்து வந்தான்.

கால ஓட்டத்திலே சூருவளிப் புயல்

ஆனுல், காலம் மாறியது. மெல்ல மெல்ல, அவன் சீரிய நல்வாழ்வு சீர்குலைந்தது. அவனிடையே காணப் பட்ட மகிழ்ச்சி, தன்னிறைவு, செழிப்பு எல்லாம் தலை கீழாக மாறியது. கால ஓட்டத்திலே, அவன் வறியனுனுன். உலக சரித்திரத்திலேயே, இந்திய விவசாயியின் இந்த சீர்குலைவு போல் அவ்வளவு பெரிய சோக நாடகம் எங்குமே, எப்பொழுதுமே நடந்ததில்லை. கடந்த சாலத்திலே அவன் பட்ட கொடுமைகள், வறுமையின் கோரப் பிடியிலே சிக்கி அவனடைந்த " வேதனைகள்—அதனுல் அவன் துடித்து துடித்து மாண்டது— உள்ளத்தை உருக்கும் அந்தச் சோகக் கதையை எழுத்தில் சொல்ல முடியாது.

ஆனுல் இந்திய விவசாயி முழுதும் அழிந்துவிடவில்லை. ஒரு காலத்தில் தன்னிறைவு பெற்றுத் திகழ்ந்த கிராமங்கள் வெறும் மாட்டுக் கொட்டில்களாக மாறின. இருந்தாலும், அந்தக் கிராமத்திலேயேதான் அவன் வசித்தான் சகிக்க முடியாத வறுமையிலும் அவன் தன் வாழ்க்கையை நடத்திக்கொண்டுதான் வந்தான். அவன் கண்களிலே ஒளி மங்கிவிட்டது. அவன் கால்களிலே வலிவு இல்லை. வாழ்க்கை அவனே வாட்டி எடுத்துவிட்டது. இன்று அவன் வெறும் சக்கை. இருந்தாலும், சோகத்தைக் கக்கும் அவனுடைய விழிகளிலே, இதையெல்லாம் மீறிய ஒரு சக்தி—ஒரு ஜீவ சக்தி—உண்மையும், அறிவும், பண்பாடும் இழைந்தோடும் அற்புதமானதொரு ஒளி—மிளிர்வதைக் காண முடியும். வறுமையிலும், வேதனையிலும் கூட அவனேடு கூடப்பிறந்த பண்பாட்டுணர்ச்சி மங்கிப் போய்விடவில்லை.

அப்படிப்பட்ட இந்த நாட்டு விவசாயியின் வாழ்க்கையிலே மீண்டும் மகிழ்வையும், தன்னிறைவையும் ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும்? பழங்காலத்திலே பெருமிதத்துடன் வாழ்ந்து, இடைக்காலத்திலே இன்னல் பட்டு கலங்கும் அவன் வாழ்க்கைக்கு இன்று என்ன தேவை? நாளைக்கு அவன் கதி என்ன?

அற்புதமான சோபையுடன் விளங்கிய அந்தக் காலம்

பழமை புதுமையை உருவாக்குகிறது. இந்த நாட்டு விவசாயியின் பழம்பெரும் வாழ்வு ஒன்றும் சாதாரண மானதல்ல. **கடந்த காலத்திலே, கிராமக் குடியாட்சி முறையின் கீழ், இந்த நாட்டிலே ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்றதாகவும், சக்தி பொருந்தியதாகவும் விளங்கியது.** அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்காமல், பரவலான முறையில் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. இந்திய நாட்டிலே அறிவொளி பரப்பும் கல்விச் சாலைகளாக கிராமங்கள் விளங்கின. கிராமச் சமுதாயம் அறிவு மிளிர்ந்ததாய், ஆக்க உணர்ச்சி உடையதாய், மக்கள் நல் வாழ்வு வாழ ஊக்கமளிப்பதாய்த் திகழ்ந்தது. பொது நன்மைக்காக ஒவ்வொரு தனி மனிதனும் பாடுபட்டான். அந்தக் காலத்திலே இந்தியக் கிராமத்தில் பாலும் தேனும் கலந்தோடியது என்று சொன்னுல் மிகையாகாது. கலை, இலக்கியம், சிற்பம், எல்லாத்துறைகளிலும் இந்த நாடு மேம்பட்டு விளங்கியது. அமைதியும் அன்புமே வாழ்வின் லட்சியம் என்ற செய்தியை இந்தியா உலகிற்கு அளித்தது. இந்த நாட்டின் இணையற்ற அறிவுச் செல்வமும், பொன்னும், மணியும் மற்ற நாட்டுக்காரர்களை கைகொட்டி அழைத்தன.

பழமை பொருந்திய கிராமச் சமுதாய வாழ்க்கை அமைப்பு முறை தான் இந்த நாட்டின் மேம்பாடான நிலைக்கே ஆணிவேராக இருந்தது. ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளும் உயரிய மனப்பண்பு, மற்றவர்களின் உரிமைகளை மதித்து நடத்தல், கிராம ஆட்சிமுறை அமைப்பில் சரிசமமான உரிமைகளை வழங்குதல், சேவை மனப்பான்மை இவையே அந்தக்கால கிராம சமுதாய அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

கிராமத்தில் நிலவி வந்த இந்தச் செயலாற்றும் திறன், நாடெங்கும் புத்துணர்வை ஏற்படுத்திய கிராமக் குடியாட்சி முறை, சீர்குலையும் காலம் வந்தது. அந்நிய ஆட்சிப் பிடியிலே இந்த நாடு சிக்கியது. குழப்பமும், கொந்தளிப்பும், ஏழ்மையும், இன்னல்களுமே கண்ட பலன்கள்.

காந்தியடிகள் ஆற்றிய தொண்டு

இதை மாற்றியமைக்க, சீர்கெட்டுப்போன சமுதாயத்தை மறுபடியும் பழைய மேம்பாடான நிலையிலே கொண்டு வர, மகாத்மா காந்தி பாடுபட்டார். காங்கிரஸ் இயக்கத்தை—ஒரு பெரிய தேசிய இயக்கமாக அவர் மாற்றியமைத்தார். அவர் பின்னுல் இந்திய மக்கள் அணிவகுத்துத் திரண்டனர். உலகமே இதுவரைக் கண்டிராத விழிப்புணர்ச்சி ஒரு புதுத்துறையில் உருவாகியது. அடிமைச் சங்கிலி உலகின் பல்வேறுபட்ட பாகங்களிலும் உடைத்தெறியப்பட்டது. இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவிற்குப் பின் ஏற்பட்ட விளைவுகள் மகத்தானவை. விடுதலை முழக்கம் இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் முழங்கியது. புதியதொரு இந்தியாவை, புதியதொரு பர்மாவை, புதியதொரு இந்தோசீனத்தை, ஏன் புதியதொரு ஆசியாவையே தோற்றுவிக்க உலகச்

“ சுதந்திரப்போர் என்பதன் பொருள் அரசியல் விழிப்படைவது மட்டுமன்று, சகல துறைகளிலும் விழிப்படைவதாகும்.”

சூழ்நிலை உதவிபுரிந்தது. இந்திய விவசாயி மறுபடியும் முன்னேற்றப்பாதையில் நடை போடத் தொடங்கினான். ஆசியாவிலேயே, விவசாயிகளிடையே ஒரு புது விழிப்புணர்ச்சி உதயமாகியது.

இந்தியா தன்னுடைய விடுதலையைப் பெற, உலகமே கண்டிராத புதியதொரு வழியைக் கடைப்பிடித்தது. அகிம்சையும், சமாதானமும் அதன் அடிப்படைக் கொள்கைகளாயின. மகாத்மா காந்தியின் தலைமையில் மிகவும் சிரமமான பாதையை நாடு ஏற்றுக்கொண்டது. அந்த மகானின் பேரொளியின் முன்னால், இன்னல்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடின. அவருடைய தலைமையில், நாடு அகிம்சை வழியைக் கடைப்பிடித்து, மகத்தான வெற்றியை அடைந்தது. உலகமே கண்டு வியக்கும்வகையில் நாடு தன் விடுதலையைப் பெற்றது.

பெற்ற சுதந்திரத்தை பேணிக் காக்கும் பொறுப்பு எல்லோரையும் சார்ந்ததாகும். சமாதான முறையில், ஒரு சமதர்ம குடியரசை நிறுவும் திருப்பணியிலே நாடு இன்று இறங்கியுள்ளது.

நாட்டின் வளர்ச்சிக்கு பஞ்சாயத்துதான் அடித்தளம்

இது ஒரு மகத்தான வேலையாகும். இந்தத் துறையிலே நாம் வெற்றி பெற வேண்டுமென்றால், இந்திய விவசாயியின்—கிராம மகனின் ஒத்துழைப்பும், சேவையும் இல்லாமல் முடியாது. அவன் தன்னுடைய பங்கை நிறைவேற்றும் வகையில் திட்டங்கள் தீட்டப்படவேண்டும். இந்த நாட்டில் எந்த முயற்சியும், அவன் கலந்துகொள்ளாமல், முழு வெற்றியை அடைந்துவிட முடியாது. லட்சியத்தை அடைவதில், இந்தியாவிற்கென்று ஒரு தனி வழி உள்ளது. நாட்டின் பண்பாட்டுணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு பார்த்தோமேயானால், மனித சமுதாயத்தின் முழுவளர்ச்சிக்கும் இந்தியாவின் கிராமப் பஞ்சாயத்து ஆட்சி முறைதான் அடித்தளம் என்று சொல்வது மிகையாகாது. கிராமப் பஞ்சாயத்து ஆட்சி முறை இந்தப் பெரிய உண்மையை உள்ளடக்கியுள்ளது. கிராமங்களில் குடியாட்சியையும் சமதர்மவாழ்வையும் நிலைநாட்ட வழிவகை செய்யும் கிராமப் பஞ்சாயத்துக்கள் எதிர்கால முன்னேற்றத்திற்கு ஆவன செய்யும் சக்தி வாய்ந்த நிறுவனங்களாகும். கிராமங்களில் பூசல்களைக் களைந்து, அமைதியான வாழ்வு காண அவை அடிகோலும். அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்காமல், பரவலான முறையில் பிரித்துக் கொடுக்கும் வகையில், நிர்வாக ஸ்தாபனங்களாகப் அவைபணியாற்றும். கிராமப்பஞ்சாயத்துக்கள் உண்மையான மக்களாட்சிக்குஅடிகோலுபவையாகும். சமுதாயத்தில் பொதிந்து கிடக்கும் சக்திகளையெல்லாம் திரட்டி கிராமங்கள் தன்னிறை பெற்று முன்னேற்றப்பாதையில் நடைபோட ஆக்கமளிக்கும் நல்லதொரு சக்தியாக கிராமப் பஞ்சாயத்துக்கள் மிளிரும். பூசல்களை நீக்கி புதியதொரு சமுதாயத்தை நிறுவ அவை உறுதுணையாக இருக்கும்.

உலக சமுதாயத்தை நிறுவ உறுதுணையாக....

இந்தத் துறையில் கிராமப் பஞ்சாயத்துக்களின் பங்கு பிரமிக்கத்தக்கதாக இருக்கும். கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைதியான முறையில் நல்லதொரு சோஷியலிச குடியரசைக் கட்டிக்காக்கும் பணியில் சரித்திரப் பிரசித்தம் வாய்ந்த தங்களுடைய பங்கைச் செய்து, விவசாயப் பெருங்குடி மகனின் எதிர்காலத் தலைவிதியை நிர்ணயம் செய்யும். சமுதாய அடிப்படையில், ஒரு கூட்டு மனப்பான்மையும், ஒருமைப்பாடும் சேர்ந்து விளங்கும் லட்சிய சமுதாயத்தை நிறுவ இன்றைய மனித சமுதாயம் தொடங்கியுள்ள பணியில், கிராமப் பஞ்சாயத்துக்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்ல, அடிப்படைத் தேவையானதுமாகும். எத்தனை இடர்ப்பாடுகள், பூசல்கள், போர்வெறி இருந்தாலும் இவை அத்தனையும் மீறிக்கொண்டு, மனிதசமுதாயம் "ஒரே உலகம்" என்ற லட்சியத்தை நோக்கிச் சென்றுகொண்டுதான் இருக்கிறது. அப்படிப்பட்ட லட்சிய சமுதாயம், சகோதரத்துவம், சமத்துவம் என்ற அடிப்படையில்தான் உருவாக முடியும். அங்கே அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்காது. அதிகாரமானது பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு சமுதாயமும் தனித்தனியே அதிகாரம் பெற்ற நிறுவனங்களாக விளங்கும். இருந்தாலும், மனித சமுதாயம் ஒற்றுமையுணர்ச்சி மங்காமல் திகழும். நல்லதொரு ஒற்றுமை உணர்வு மனித குலத்தையே இரண்டறப் பிணைத்து, புதியதொரு சமுதாயத்தை உருவாக்க பயன்படும்.

எதிர்காலத்தில் எற்படப்போகிற இந்தச் சமுதாயத்தில் சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய இந்த மூன்றும் மறுபடியும் புத்துருவம் பெற்று, மேலும் மெருகும் வலிவும் ஊட்டப்பட்டு, நல்லதொரு மறுமலர்ச்சியின் பிரதிபலிப்பாகத் திகழும். மனிதன் முன்னேற்றப்பாதையில் நடைபோடத் தொடங்கிவிட்டான். அவனுடைய இந்த லட்சியப் பயணம் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கும். அவனுடைய இடையருஊக்கமும் செயலாற்றும் திறமையும் என்றைக்கும் தொடர்ந்து இருந்து கொண்டேதான் இருக்கும்.

அப்படிப்பட்ட மேம்பாடான உலக சமுதாயத்தை நிறுவுகின்ற வேலையில், இந்த நாட்டில் கிராமப் பஞ்சாயத்து ஆட்சி முறை அடைகின்ற வெற்றியானது மகத்தானதொரு உறுதுணையாக விளங்கும் என்பது உறுதி.

[எச. டி. மாளவியாவின் "Village Panchayats in India" என்ற நூலின் கடைசி அத்தியாயத்தின் சாரம்.]

" இந்தியாவில் ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாக என்றேனும் அமையவேண்டுமானல் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வித்தியாசத்திற்கு இடமில்லாத என்னுடைய லட்சியத்தை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்."

அரசாங்க ஆணையின் சுருக்கம் :—

கிராமப் பஞ்சாயத்து தொகுதி நிதி

[கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை 1428 எண்ணுள்ள, 24-8-60 தேதியிட்ட அரசாங்க ஆணை]

நடைமுறை உத்திரவுகளின்படி, ஒவ்வொரு பஞ்சாயத்தும்—முதல் நிலை (பட்டணப்) பஞ்சாயத்தும் இரண்டாம் நிலை (கிராமப்) பஞ்சாயத்தும்—அருகாமையில் உள்ள சர்க்கார் கஜானுவில் ஒரு பாங்குக் கணக்கு வைத்துக் கொண்டு தனிப்பட்ட வைப்புக் கணக்கு [Personal Deposit Account] பராமரித்து வரவேண்டும். பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட உண்டியல் நிர்வாக அதிகாரம் பெற்றவர் (அதாவது முதல் நிலையான பட்டணப் பஞ்சாயத்துக்கள் என்று குறிப்பிட்டவைகளில் நிர்வாக அதிகாரியும், இரண்டாம் நிலையான கிராமப் பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்துத் தலைவரும்) பஞ்சாயத்துக்களின் பாங்குச் செலாவணித் தொகையின் பேரில் செக்குகள் மூலம் (cheque) சமாளிக்கும் முறையில், நடைமுறையில் செயல்படுத்த வேண்டும்.

2. சென்னை ட்ரெஷரிகோடு(TreasuryCode) (முதல் வால்யூம்) நான்காவது அத்தியாயம் அறிவிப்பு மூன்றில் சர்க்கார் கஜானுக்களில் பஞ்சாயத்து நிதிகளை வைப்பு வைக்கவும் அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவும் வேண்டிய விதி முறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. கஜானு விதி 16-ல் 38, 38 (a) ஆகிய இரு அறிவிப்புக்களில் கண்டபடி, நிலவரி, முத்திரை வரி சர்சார்ஜ், நீதி நிர்வாகத்தினல் விதிக்கப்படும் அபராதத்திற்காக இருக்கும் மானியத் தொகை, மீன் விற்ற குத்தகை இப்படிப்பட்ட துறைகளில் பஞ்சாயத்துக்களுக்கு கிடைக்கும் வருமானங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. சென்னை அக்கவுண்ட் கோட் (Account Code) வால்யூம் இரண்டு 110, 111-வது அத்தியாயங்களில் ஒவ்வொரு உள்ளாட்சி நிதிக் கணக்குகளினல் (Local Fund Account) ஏற்படுகின்ற கூட்டல் கழித்தல் நமூனக்களைத் தயாரித்தல் வரையறை செய்யப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட வேலை முறையானது, 1958-ம் ஆண்டின் சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் கண்ட விதி முறைகளுக்கேற்ப, இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டாக வேண்டும். அந்தத் திருத்தி அமைத்தல் கீழ்க்கண்ட முறைகளில் இருக்கும்:—

(i) 1920-ம் ஆண்டு சென்னை மாவட்டங்களின் சட்டத்தில் விதித்துள்ள விதி முறைப்படி ஒரு பஞ்சாயத்துப் பிரதேசத்தில் வசூலிக்கப்பட்ட நில வரி வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு பஞ்சாயத்து நிதியில் சேர்க்கப்பட வேண்டும். இந்த விதி முறையில் செய்யப்பட்டுள்ள வசதியின்படி, நில வரி இலாக்கா அதிகாரிகள், சட்டத்தின்படி பஞ்சாயத்துக்குக் கிடைக்க வேண்டிய நிதியைக் கணக்கிட்டு, அந்தத் தொகை சர்க்கார் கஜானுவில் உள்ள சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் கணக்கில் சேர்த்து விடுகிருர்கள். ஆனுல், 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்களின் சட்டம் 115 (4) (c) பிரிவு, நிலவரி மூலம் வரும் வருமானத்தில் கிராமப் பஞ்சாயத்து நிதியில் சேர்க்கப்பட வேண்டிய சத விகிதத்தை நிர்ணயிக்கும் உரிமையை பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கு அளிக்கிறது. சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள உச்சவரம்புக்குட்பட்டு இந்த சத விகிதமானது ஆண்டுக்கு ஆண்டு வித்தியாசப்படலாம். கிராமப் பஞ்சாயத்துக்களுக்குச் சேர்க்கப்பட வேண்டிய தொகையை இப்பொழுது இருப்பதுபோல், நிலவரி இலாக்கா கணக்கிடாமல், அந்த வேலையைப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகமே செய்யும்.

(ii) சொத்துக்கள் மாற்றத்தின் பேரில் போடப்படும் முத்திரை வரி மீது, ஒரு சர்சார்ஜ் விதிக்க, 1950-ஆம் ஆண்டு கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 67-வது பிரிவு, வழி வகை செய்கிறது. பஞ்சாயத்துக்கள் சார்பாக விதித்து வசூலிக்கப்படும் முத்திரை வரி சர்சார்ஜ் கணக்கை ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தனியாக ரிஜிஸ்ட்ரேஷன் இலாக்கா கவனித்து வருகிறது. இந்தத் தொகையானது ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் கால் வருடத்திற்கொரு தடவை மொத்தமாகச் சேர்க்கப்பட்டு அப்படிப்பட்ட கூட்டுக் கணக்கானது ஒவ்வொரு கால் வருடத்திற்குமாக அக்கவுண்டன்ட்-ஜெனரலுக்கு அனுப்பப்படுகிறது. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு அந்தத் தொகையை அளித்துவிடுவதற்கு கஜானுக்களுக்கு அக்கவுண்டன்ட்-ஜெனரல் போதிய அனுமதியை வழங்குகிருர். ஒரு பஞ்சாயத்து யூனியனில் உள்ள பல்வேறுபட்ட பஞ்சாயத்துக்களுக்கும் வசூலிக்கப்பட்ட தொகையை வினியோகம் செய்கின்ற முறை ஒன்று தவிர, மற்ற எல்லா விஷயத்திலும் 1958-ஆம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள்

சட்டமும், 1950-ம் ஆண்டு சென்னை கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டமும் ஒன்றுக்கொன்று ஒரே மாதிரியானவை. புதுச் சட்டத்தின்படி, சொத்து மாற்றங்களின்பேரில் ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்திலும் முத்திரை வரி சர்சார்ஜ் மூலம் வசூலிக்கப்படுகிற தொகையை ஒவ்வொரு வருடமும் ஒன்று திரட்டி, கிராமத்தின் நிலவரிவருமானத்திற்கு சமமான அளவில் வட்டாரத்தில் உள்ள எல்லாக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் வினியோகம் செய்ய வேண்டும். ஆகவே, புதுச் சட்டத்தின்படி ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்திலும் வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று முதலில் தீர்மானிக்க வேண்டும். அதன் பிறகு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தினுல் வினியோக முறை கணக்கிடப்பட வேண்டும்.

(iii) ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்தில் செயல்புரிகின்ற பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கும் பஞ்சாயத்துக்களுக்குமிடையே, மாநில அரசாங்கம் வரையரை செய்கிற விகிதாசார முறைப்படி, கேளிக்கை வரி மூலம் வருகின்ற மொத்த வருமானத்தை பிரித்துக் கொடுக்கிற அதிகாரத்தை மாநில அரசாங்கத்திற்கு 1958-ஆம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 195-வது விதி அளிக்கிறது.

அறிவிப்புகளை வெளியிடும் வரையில் வசூல் செய்யப்பட்ட தொகையை சரிக்கட்டுதல், அந்தத் தொகையை பிரித்தளித்தல் ஆகிய விஷயங்களில் இப்பொழுது இருக்கும் வேலை முறையைத் தொடர்ந்து இருக்க வேண்டும். ஆனாலும், அப்படிப்பட்ட அறிவிப்புகள் வெளியான உடனேயே இந்த முறை மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கொடுக்கவேண்டிய தொகை பற்றி கணக்கிடப்படுதலாகிய வேலை பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தால் செய்யப்பட வேண்டும்.

4. ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்திலுள்ள பல்வேறுபட்ட பஞ்சாயத்துக்களுக்கும் அளிக்கப்பட

> "ஞாலம் கருதினும் கைகூடும்" என்ற பொய்யாமொழி பிறந்த தமிழ் நாட்டில் காந்தியடிகள் போன்ற தலைவர்கள் நிர்மாணம் செய்ய விரும்பிய புதிய கிராமங்களை அமைப்பது ஆகாத காரியமல்ல. "எண்ணிய எண்ணியாங்கு எய்துபவர்" என்னும் தமிழ் வேதத்தில் கண்ட உண்மையை மனத்தில் இறுத்தி பாரத நாடு வளம் பெறவும், கிராமங்கள் தழைக்கவும் எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்போமாக".
>
> ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி,
> மாநில இணை அபிவிருத்திக் கமிஷனர்.

> "நாம் பிறர் குழந்தைகளுக்குப் பால் வழங்கி, அவர்கள் அதை அருந்திய பின் அவர்கள் கண்ணில் தோன்றும் ஒளியைக் கண்டு இன்புற வேண்டும். நாம் பிறர் துன்பத்தைப் பெற்றுக்கொள்ளவும், நம் இன்பத்தைப் பிறருக்கு பகிர்ந்தளிக்கவும் வேண்டும். அன்பையும் கருணையையும் காட்டும் இதுவே சர்வோதயத்தின் செய்தி."
>
> ஆச்சார்ய விநோபாஜி

வேண்டிய தொகையில் ஒரு கணிசமான அளவானது பஞ்சாயத்து யூனியன் நிர்வாகிகளினுல் வகுக்கப்பட்டு பஞ்சாயத்துக்களின் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்பது இதன் மூலம் தெரிகிறது.

5. இது தவிர, தற்போதுள்ள வேலை முறைப்படி ஒரு உப கஜானுவும், 100 பஞ்சாயத்துக்களுக்கு மேல் பட்டவைகளின் தனிப்பட்ட வைப்புக் கணக்குகளைப் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்துக்கள் மேலும், மேலும் அமைக்கப்பட்டு அந்த வேலை முடியும்பொழுது இந்த வேலை மேலும் அதிகமாகிவிடும். இந்த நடைமுறைச் சிக்கல் பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட வைப்புக் கணக்குகளில் பாஸ் புத்தகங்களில் அவ்வப்பொழுது கணக்கைக் குறித்து வைத்தலும், நிதி ஆண்டின் முடிவின் மிச்சமிருக்கிற தொகைக்கு சான்று பெறுவதும், மிகவும் சிரமமாக இருக்கிறது என்பதும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 1958–ஆம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தை அமுல் நடத்துவதின் விளைவாக ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஏற்படும் அதிகப்படியான கணக்கு வழக்குகளை சமாளிக்கவும், வருகின்ற திட்டக் காலங்களில் அபிவிருத்தி வேலைகளில் மேன்மேலும் ஊக்கத்தை ஏற்படுத்தவும், பஞ்சாயத்துத் தலைவர்கள் அவர்களுக்குத் தேவையான பணத்தை, அதிக சிரமமில்லாமல், பெற்றுக்கொள்ள, வழி வகைகள் செய்யப்பட வேண்டும். இப்படி வழி வகைகள் செய்யப்படும் பொழுது, பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள் திறம்பட பணியாற்ற இப்பொழுது அவைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகமான வசதி முறைகளையும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அத்துடன், இந்தப் புது வேலை முறை இன்னும் அதிகப்படியான ஊக்கத்தையும், ஒத்துழைப்பையும் கீழ் அளவிலே ஏற்படுத்தும்படியான நிலையில் இருக்க வேண்டும்.

6. பஞ்சாயத்து யூனியன் அளவில் இப்பொழுது செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட அதிகப்படியான நிர்வாக வசதிகளையும், குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து

"தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்வதாகிய சுய ஆட்சிதான் சுயராஜ்யத்துக்கு அஸ்திவாரம்."



மேட்டூர் அணையில் மீன்களை குளிர் சாதன முறையில் பாது காத்து வைக்கும் ஐஸ் யந்திரம்— குளர்ப்பதன சாதன அமைப்பு முறையை 30–8–60-ல் முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் ஆரம்பித்து வைத்தார்கள். தல நிர்வாகத் துறை அமைச்சர் ஸ்ரீமதி லூர்தம் மாள் சைமன் அந்த விழாவிற்கு தலைமை வகித்தார்கள்.



யூனியனுக்கு ஒரு பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரி இருப்பார். பஞ்சாயத்துக்களின் கணக்குவழக்கு சம்பந்தப்பட்ட விஷயங்களில் அவர் உதவியாகவும், வழிகாட்டியாகவும் இருப்பார். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கும், ஒரு மானேஜர், ஒரு பயிற்சி பெற்ற கணக்காயர் (Accountant), ஒரு பொக்கிஷதாரர் இருப்பார்கள்.

7. மேற்கண்ட எல்லா அம்சங்களையும் கவனமாக ஆராய்ந்து பார்த்து, அரசாங்கம் கீழ்க்கண்டவாறு உத்திரவிடுகிறது :—

(i) உப கஜானவில் தனிப்பட்ட வைப்புக் கணக்கை ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் வைத்திருக்க வேண்டும் என்று இப்பொழுதுள்ள விதி முறையானது சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் அடங்கியுள்ள பிரதேசத்தில் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பிக்கப்படும் தேதியிலிருந்து ரத்து செய்யப்படும். பஞ்சாயத்து யூனியனில் அடங்கியுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களின் சார்பாகப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரால், பஞ்சாயத்து யூனியன் இருக்கின்ற தாலுக்காவில் உள்ள உப கஜானவில் ஒரு தனிப்பட்ட வைப்புக் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். பஞ்சாயத்து யூனியனில் அடங்கியுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களின் சார்பாக இப்படி வைக்கப்படுகின்ற தனிப்பட்ட வைப்புக் கணக்கானது "கிராமப் பஞ்சாயத்து தொகு நிதி" (Village Panchayats Consolidated Fund) என்று அழைக்கப்படும். தொகுப்பான அமைப்பிலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள் அவைகளுக்குத்தேவையான பணத்தை அவ்வப்பொழுது பெற்றுக்கொள்ள வசதி செய்ய, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஒரு பணப்பெட்டகத்தை (Cash Chest) ஏற்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துக்கும் ஒரு தனியான கணக்கை, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவரது அலுவலகத்தில் வைத்திருப்பார்.

(ii) பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தால் பராமரிக்கப்படுகின்ற இந்தக் கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி கணக்கு வழக்கானது, உள்ளாட்சி மன்ற நிதிக் கணக்குத் தணிக்கையாளரால் தணிக்கை செய்யப்படலாம்.

இணைப்பு

கிராமப் பஞ்சாயத்துத் தொகுப்பு நிதியைப் பராமரிப்பதற்கான விவரங்கள் அடங்கிய நமூனு

கீழ்க்கண்ட அம்சங்கள் பற்றிய ஒரு பஞ்சாயத்து யூனியனில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களின் சார்பாக பெறும் வரவுகளை, கிராம பஞ்சாயத்துத் தொகு நிதி உள்ளடக்கி இருக்கும்:—

(1) 1958-ஆம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டம் 115 (4) (c)-வது பிரிவின் கீழ், பஞ்சாயத்துக்களின் வரவுகளில் சரிக்கட்டப்பட்டுள்ள பிரதேச மானியம்;

(2) சட்டத்தின் 124 (3) (a) பிரிவின்கீழ், பஞ்சாயத்துக்களின் வரவுகளில் சரிக்கட்டப்பட்டுள்ள சொத்து மாற்றங்களின் பேரில் விதிக்கப்பட்ட வரிகள் ;

(3) குற்ற இயல்பற்றிய அபராதத் தொகைகள் ;

(4) லைசன்ஸ் கட்டணங்கள் ;

(5) பஞ்சாயத்துக்களின் வரவில் சரிக்கட்டப்பட்டுள்ள கேளிக்கை வரிகள் ;

(6) பஞ்சாயத்துக்களின் வரவில் சரிக்கட்டப்பட்டுள்ள கிராம வீட்டு வரி இணை மானியம் ;

(7) பஞ்சாயத்துக்களின் வரவில் சரிக்கட்டப்பட்டுள்ள பல்வகைப்பட்ட அபிவிருத்தி மானியங்கள் ;

(8) 126-வது பிரிவின் கீழ், நிலவரி இலாக்கா சிப்பந்திகளினால், பஞ்சாயத்துக்களின் சார்பாக வசூலிக்கப்பட்டு, பஞ்சாயத்துக் கணக்குகளில் சரிக்கட்டப்பட்டுள்ள பல்வேறுபட்ட வரிகள்;

(9) பஞ்சாயத்துக்களால் செய்யப்பட்ட வசூல் தொகையைச் செலுத்துவது ; மற்றும் பிறவும்.

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களின் சார்பாக, கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதியை பராமரித்துப் பார்த்துக் கொள்வார். நிதி பற்றிய ஒரு தனிப்பட்ட வைப்புக் கணக்கு (Personal Deposit Account) பஞ்சாயத்து யூனியன் இருக்கின்ற பிரதேசத்தில் உள்ள தாலுகா உப கஜானவில் பராமரித்து வைத்துக்கொள்ளப்படும்.

II. சென்னை ட்ரெஷரி கோட், விதி 16, அறிக்கை 22 ல், உப கஜானவில் வைக்கப்பட்டுள்ள தனிப்பட்ட வைப்புக் கணக்கு செயல்படுத்தப்படும்.

III. பஞ்சாயத்துத் தலைவர்கள் வேண்டும் பொழுது ரொக்கத்தை பெற்றுக் கொள்ளவும், அவர்களுடைய வசூல் பணத்தைச் சேர்க்கவும் வசதி செய்ய வேண்டி, பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் ஒரு பணப் பெட்டகம் (Cash Chest) வைக்கப்படும். இந்தப் பணப் பெட்டகம் இரட்டை பூட்டு முறையில் இயங்கும். பூட்டுகளின் ஒரு சாவிகளும் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தின் பொக்கிஷதார் வசமும், மானேஜர் வசமும் இருக்கவேண்டும். பணப் பெட்டகத்தில் உள்ள மிச்சத் தொகை எந்தச் சமயத்திலும், மூவாயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது.

"நான் தேச பக்தியையும் மனித பக்தியையும் ஒன்றுகவே மதிக்கிறேன். மனித பக்தியில்லாதவன் தேசபக்தன் ஆகமாட்டான்."

அப்படி எப்பொழுதாவது அது மூவாயிரம் ரூபாய்க்கு மேல் போய்விட்டால், அதிகப்படியான தொகையானது, உடனே உபகஜானாவில் செலுத்தப்பட்டு, கிராமப் பஞ்சாயத்துக்கள் தொகு நிதி கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும்.

IV. ஆயிரம் ரூபாய் வரையில், தபால் அலுவலக சேமிப்பு பாங்கில் (Post Office Savings Bank) கணக்கு ஆரம்பித்து, பராமரித்துக்கொள்ள, தற்சமயம் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த வசதி, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, தொடர்ந்து அளிக்கப்படும்.

(i) வட்டாரத் தலைமையிடத்திற்கு ஐந்து மைல்களுக்கு அப்பாலுள்ளதும், சமீபத்தில் தபால் சேமிப்பு பேங்க் வசதி கிடைக்கக்கூடியதுமான நிலையில் உள்ள பஞ்சாயத்துக்கள் தான் இப்படிப்பட்ட தபால் சேமிப்பு பாங்கில் கணக்கு வைத்துக்கொள்ளலாம்.

(ii) தபால் சேமிப்புப் பாங்கில் பஞ்சாயத்துக் கணக்கில் வரவு வைக்கப்படும் தொகை ஒரு சமயத்தில் 500 ரூபாய்க்கு மேல் போகாமல் இருக்கவேண்டும்.

(iii) தபால் சேமிப்புப் பாங்கில் போடப்படும் தொகைகள், பஞ்சாயத்து யூனியன் பணப் பெட்டகத்திலிருந்து மாற்றப்படும் நிதிகளாகத்தான் இருக்கவேண்டும். மற்றப்படி இருக்கக்கூடாது. அதாவது, வசூல் செய்யப்பட்ட தொகைகள் எதுவும், நேரடியாக தபால் சேமிப்புப் பாங்கில் போடப்படக்கூடாது. அன்றாடச் செலவினங்களுக்கு, வருகின்ற வருவாயை எடுத்துக் கையாள பஞ்சாயத்து தலைவர்களுக்கு அதிகாரம் கிடையாது. பஞ்சாயத்துத் தலைவர்களாலோ, பஞ்சாயத்துக்களினாலோ, கிராம அதிகாரிகளினாலோ, வசூல் செய்யப்படுகிற பஞ்சாயத்து வருமானங்கள் அத்தனையும், அவ்வப்போது, குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கொரு தடவையாவது, பஞ்சாயத்து யூனியன் பணப்பெட்டகத்தில் போடப்படவேண்டும். ஆனால் ஒரே சமயத்தில் வசூல் செய்யப்படும் தொகை ரூபாய் நூறுக்கு மேல் போய்விட்டால், உடனடியாக அந்தத் தொகை பஞ்சாயத்து யூனியன் பணப் பெட்டகத்தில் போடப்படவேண்டும். V.P.C படிவம் எண் 1-ல் கண்டுள்ள செலுத்துச் சீட்டு (chalan) மூலம் இந்த வசூல் தொகை கட்டப்படவேண்டும்.

(iv) பணப் பெட்டகத்தில் போடப்படும் தொகை தனியாக வைத்துக் கொள்ளப்பட்டு, உப கஜானாவில் அவ்வப்போது கட்டப்பட்டுவிடவேண்டும். பஞ்சாயத்துக்களிடையே விநியோகம் செய்ய இந்தத் தொகையை எந்தக் காரணத்தை முன்னிட்டும் உபயோகப்படுத்தக்கூடாது. பணப் பெட்டகத்தில் இருக்கவேண்டிய தொகையில் உச்ச வரம்பான ரூபாய் மூவாயிரம் என்பது, உப கஜானாவில் போடப்படுவதற்கு முன்னால் உள்ள வைப்புத் தொகையையும் உள்ளடக்கியதாகும்.

V. V.P.C. படிவம் எண் 2-ல் கண்டுள்ள பணம் அளிக்கும் சீட்டை (Pay Order Form) பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் அளித்து, பஞ்சாயத்து யூனியன் பணப்பெட்டகத்திலிருந்து பணத்தைப் பஞ்சாயத்து தலைவர்கள் பெற்றுக்கொள்ளலாம். முப்பது ரூபாய்க்கு மேல் பட்ட ஒரு தொகையை மற்றவர்களுக்கு அளிக்க வேண்டி வந்தால், பணம் அளிக்கும் சீட்டு யாருக்குப் பணமானது கொடுக்கப்படுகிறதோ, அவர் பேரில் வாங்கப்படவேண்டும்.

VI. வரவு வைக்கும்பொழுது, வரவைச் செலுத்தும் சீட்டு (Remittance chalan) (V.P.C. படிவம் எண் 1) (நகலுடன்) பணத்துடன் பஞ்சாயத்து யூனியன் கணக்கரிடம் (accountant) அளிக்கப்படவேண்டும். இந்த வரவுச் சீட்டை சரிபார்த்து, அதற்கு ஒரு எண்ணை கணக்கர் அளிப்பார். அந்த எண் அவரால் பராமரிக்கப்பட்டுவரும் நெம்பர் புத்தகத்தில் (V.P.C. படிவம் எண் 3) உள்ள எண்ணோடு ஒத்துப்போயிருக்கும், அதன் பிறகு, அவர் வரவுச் சீட்டை பணப் பொறுப்பாளரிடம் (Cashier) அனுப்புவார். (1) அவர் பணத்தைப் பெற்றுக்கொண்டு (ii) வரவுச் சீட்டில் அதற்காக கையொப்பத்தை இட்டு, (iii) வரவுச் சீட்டிற்கு ஒரு எண் கொடுப்பார். [இந்த எண் அவருடைய சிட்டாப் புத்தகத்தில் (V.P.C. படிவம் எண் 4) உள்ள எண்ணோடு ஒத்துப்போகும்படியாக இருக்கும்.] (iv) வரவுச் சீட்டில் முத்திரையிடுவார். அதன் பிறகு வரவுச் சீட்டு பஞ்சாயத்து யூனியன் மானேஜரிடம் அனுப்பப்படும். பணத்தைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக, அவர் அதில் தன்னுடைய கையொப்பத்தை இட்டு, அவருடைய நெம்பர் புத்தகத்தில் (V.P.C. படிவம் எண். 8) வரவுச் சீட்டு நெம்பரையும், பெற்றுக்கொண்ட தொகையையும் பதிவு செய்துகொண்டு, வரவுச் சீட்டின் அசலை அவர் பணம் போடுபவரிடம் அனுப்பிவிடுவார். அன்றைய தின கடைசியில், அவருடைய நெம்பர் புத்தகத்தில் பதிவு செய்திருப்பதை கணக்கரின் சிட்டாப் புத்தகத்துடன் சரி பார்த்து, ஒன்றுக்கொன்று சரியாக இருக்கிறதா என்று பார்த்த பிறகு, அன்றைய கணக்கு முடியும் சமயத்தில் கணக்கரிடம் வரவுச் சீட்டு நகலை அனுப்பிவிடுவார். கணக்கர், V.P.C. படிவம் எண். 5-ல் கண்டுள்ளபடி, பராமரிக்கப்பட்டு அவருடைய லெட்ஜர் புத்தகத்தில் குறிப்பிட்ட பஞ்சாயத்தின் கணக்கில் அந்த தொகையை வரவு வைத்துக்கொள்வார்.

VII. பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் ஒரு பணம் அளிக்கும் சீட்டு சமர்ப்பிக்கப்பட்டதும், அது முதலில் கணக்கரால் பெற்றுக் கொள்ளப்பட்டு, பஞ்சாயத்தின் வரவில் போதியத் தொகை இருக்கிறதா என்று அவரால் சரிபார்க்கப்பட்டு, அத்துடன் அதில் போடப்பட்டுள்ள பஞ்சாயத்துத் தலைவரின் கையொப்பமும், பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் முன்பே தயாராக உள்ள அவருடைய

"சாதனம் எத்தகைய நல்லதாக இருந்தாலும், லட்சியம் தீயதாயிருந்தால் சாதனமும் தீயதாகவே ஆகிவிடும்."

மாதிரி கையொப்பமும் ஒரே மாதிரியாக இருக்கிறதா என்று அவரால் தணிக்கை செய்து பார்க்கப்படும். அதன் பிறகு கணக்கர் அந்தச் சீட்டிற்கு ஒரு நெம்பர் அளிப்பார். இந்த நெம்பர் (V.P.C. படிவம் நெ. 6)-ல் கண்டுள்ளபடி அவரால் பராமரிக்கப்பட்டுவரும் நெம்பர் புத்தகத்தில் உள்ள நெம்பரோடு ஒத்துப்போகும்படியாக இருக்கும். பணம் பெற்றுக்கொள்ள வந்துள்ளவரின் கையொப்பத்தை தக்க சான்றுடன் பெற்றுக்கொண்டு, அந்தச் சீட்டின் பின் புறத்தில் பணம் அளிக்கும் உத்தரவை கணக்கர் எழுத வேண்டும். அதன் பிறகு அது பஞ்சாயத்து யூனியன் மானேஜரிடம் அனுப்பப்படும். அவர் அந்த உத்தரவில் கையொப்பம் இட்டு, பணம் அளிப்பதைக் குறிப்பட்டு வைக்கும் தன்னுடைய நெம்பர் புத்தகத்தில் (V.P.C. படிவம் எண். நெ. 6) கண்டுள்ள நெம்பருக்கு ஒத்துப் போகும்படியான ஒரு நெம்பரை, அந்தச் சீட்டிற்கு அளிப்பார். அதன் பிறகு, அது பொக்கிஷதாருக்கு பணம் அளிப்பதற்காக அனுப்பப்படும். அந்தச் சீட்டிலேயே பணம் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக பணம் பெற்றுக்கொள்ள வந்தவரின் கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டு, பணத்தை பொக்கிஷதார் அவருக்கு கொடுப்பார். பணம் அளிக்கும் ரிஜிஸ்டரில் (V.P.C. வடிவம் எண். நெ. 7) பணம் அளித்த கணக்கை பொக்கிஷதாரர் குறித்து, அத்துடன் நெம்பர் புத்தகத்தில் உள்ள நெம்பரையும் பதிவு செய்து கொள்வார். பணம் அளிக்கும் உத்தரவை முத்தரையிட்டுவைத்துக்கொள்வார். பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு பணம் பெற்றுக்கொள்ள வேண்டி நேரில் வர இயலாத சந்தர்ப்பங்களில் யார் மூலம் பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமோ, அந்த உத்தர வின் பின்னால் அந்த நபரின் கையொப்பத்திற்கு தங்களுடைய கையொப்பத்தையும் போட்டு அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பணம் அளிக்கப்பட்ட உத்தரவுச் சீட்டு பணம் பெற்றுக் கொண்டதற்கு ரசீதாகக் கொள்ளப்படும். அன்றைய தினக் கடைசியில், அது மானேஜர், கணக்கர், ஆகியவர்களின் புத்தகங்களில் சரியாக ஒத்துப் போகிறதா என்று சரி பார்க்கப்பட்டு, அதன் பிறகு பணம் அளிக்கும் ரிஜிஸ்டர், கணக்கருக்கு அனுப்பப்படும். கணக்கர் அந்தத் தொகையை சம்பந்தப் பட்ட பஞ்சாயத்தின் கணக்கில் பற்று வைத்துக்கொள்வார்.

VIII, பொக்கிஷதாரர்.—கீழ்க்கண்ட ரிஜிஸ்டர்களை பராமரித்து வைத்துக்கொள்ளவேண்டும் .—

(i) கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி சிட்டா புத்தகம் (V.P.C. படிவம். எண். 4.)

(ii) கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கப்படும் தொகை விவரங்கள் அடங்கிய ரிஜிஸ்டர் (V.P.C. படிவம் எண். நெ. 7.)

மானேஜர்.—கீழ்க்கண்டவைகளைப் பராமரித்து வைத்துக் கொள்ளவேண்டும் :—

(i) வரவுகளைக் குறிபபிடும் கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி நெம்பர் புத்தகம் (V.P.C. படிவம் எண். நெ. 3.)

(ii) பணம் கொடுக்கும் இனங்களைக் குறிப்பிடும் கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி நெம்பர் புத்தகம் (V.P.C. படிவம் எண். நெ. 6.)

கணக்கர்.—கீழ்க்கண்டவைகளைப் பராமரித்து வைத்துக் கொள்ளவேண்டும் :—

(i) வரவுகளைக் குறிப்பிடும் கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி நெம்பர் புத்தகம். (V,P.C. படிவம் எண். நெ. 3.)

(2) கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி லெட்ஜர் (V.P.C. படிவம் எண் நெம்பர்-5.)

(3) பணம் அளிக்கும் விவரங்களைக் காட்டும் கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி நெம்பர் புத்தகம் (V·P.C. வடிவம் எண் நெ. 6.)

(4) கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி பற்றி வரவு செலவு இனங்களின் தொகுப்பு (V.P.C. படிவம் எண் நெ. 8.)

(5) கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதியின் ரொக்கப் புத்தகம் (V.P.C. படிவம் எண் நெ. 9.)

இந்த நமூனுவில் சேர்க்கப்பட்டுள்ள இணைப்பில் சொல்லப்பட்டுள்ள இந்த ரிஜிஸ்டர்கள் இருக்க வேண்டிய வடிவம் (Form) மிகவும் தெளிவாகவும் புரியும்படியாகவும் உள்ளது.

IX. கிராமப் பஞ்சாயத்து தொகுநிதி பேரேடு (Ledger).—இது V.P.C. படிவம் எண் 5-ல் கண்டுள்ளபடி பராமரிக்கவேண்டும். ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத் திற்கும் தனித்தனியாக பக்கம் ஒதுக்கப்படும். கணக்கரின் பணம் அளிக்கும் உத்தரவுகள், செலுத்தும் சீட்டு இவை பற்றியவை இந்த லெட்ஜரில் பதிவு செய்யப்பட வேண்டும். கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதிக்கு கணக்கை மாற்றுவதினால் ஏற்படும் வரவு இனங்களைக் குறிப்பிட்டிருப்பதோடு, இந்த ரிஜிஸ்டரில் உள்ள பதிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆலோசனைகளைப் பற்றியும் கண்டிருக்கவேண்டும். கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி பேரேட்டில் கண்டுள்ள மொத்தத் தொகையானது உபகஜானுவில் அந்த நிதியில் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட வைப்புக் கணக்கில் கண்டுள்ள மிச்சத் தொகையுடனும் பணப் பெட்டகத்தில் உள்ள மிச்சத் தொகையுடனும் ஒத்துப் போகவேண்டும்.

“கடமையைக் காட்டும் நன்னெறியே நாகரீகமாகும். கடமையைச் செய்வதும் நன்னெறியில் நிற்பதும் ஒன்றே. நன்னெறியில் நிற்பது என்பது மனத்தை அடக்கி ஆட்சி செய்வதே யாகும்.”

X. கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி பற்றிய வரவு செலவு இனங்களின் தொகுப்பு:—இது V.P.C. படிவம் நெ. 8.ல் கண்டுள்ளபடி, பராமரிக்கப்பட வேண்டும். பேரேடிலிருந்து ஒவ்வொரு மாதக் கடைசியிலும், பதிவுகள் இதில் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு மாதமும் உள்ள ஆரம்பத்தில் உள்ள மிச்சத் தொகை, மொத்த வரவுகள், மொத்த செலவினங்கள் மாதக் கடைசியில் உள்ள மிச்சத் தொகை இவை அத்தனை யையும் இது காட்டும். இந்த ரிஜிஸ்டரில் கண்டுள்ள கடைசியில் உள்ள மிச்சத் தொகையானது, கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதி ரொக்கப் புத்தகத்தில் கண்டுள்ள கடைசியில் உள்ள மிச்சத் தொகையுடனும் ஒத்துப் போகவேண்டும். இந்த ரொக்கப் புத்தகம் V.P.C. படிவம் எண். நெம்பர், 9-ல் கண்டுள்ளபடி பராமரிக்கப்பட்டிருக்கும். அத்துடன், செலுத்தும் சீட்டுக்கள், பணம் கொடுக்கப்பட்ட உத்தரவுச் சீட்டுகள், மற்ற மாற்றப் பதிவுகள் பற்றிய எல்லா விவரங் களும் தினசரி பதிவு செய்யப்பட வேண்டும். பேரேட்டில் கண்டுள்ள பதிவுகளுடன் சுலபமாக ஒத்துப்பார்க்க வகை செய்யும் வகையில், பேரேட்டில் விவரங்கள் அடங்கிய பக்க எண்ணைப்பற்றி விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

XI. அறிக்கைகளும் — நடைமுறை விவரங்களும் (Statements and Returns):—ஒவ்வொரு கிராமப் பஞ்சா யத்திற்கும், வரவு வைக்கப்பட்ட தொகை, திருப்பி கொடுக்கப்பட்ட தொகை பற்றிய மாதாந்திர அறிக் கையை V.P.C. படிவம் எண் 10-ல் கண்டுள்ளபடி, மூன்று பிரதிகள் தயாரித்துக் கமிஷனரின் கையொப்பத் திற்காக கணக்கர் அனுப்பிவைக்கவேண்டும், வரு கின்ற மாதத்தின் 10 தேதியிலோ. அதற்கு முன்னுலோ இந்த விவர அறிக்கைகளின் மூன்று பிரதிகளும் கிராமப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி களுக்கு அனுப்பப்பட வேண்டும். அதில் ஒரு பிரதி கிராமப் பஞ்சாயத்து அலுவலகததில் வைத்துக் கொள் ளப்படும். மற்ற இரண்டு பிரதிகள் வருகின்ற மாதத் தின் 20 தேதியிலோ, அதற்கு முன்னுலோ மிச்சத் தொகை சரியென்ற சர்டிபிக்கேட்டுடன், பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு திருப்பி அனுப்பப்பட வேண்டும். இந்தப் பிரதிகள் இது மாதிரி ஒழுங்காக வந்து சேர்கிறதா என்பதைக் கணக்கர் கவனித்துக் கொண்டு வரவேண்டும். ஒரு பிரதி கணக்கரிடம் இருக்கும். மற்றொரு பிரதி, தணிக்கைச் சமயத்தில் அவருடைய உபயோகத்திற்காக பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிக்கு அனுப்பபடவேண்டும். ஒவ்வொரு நிதி ஆண்டின் கடைசியிலும், கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதியில் உள்ள மிச்சத்தொகைபற்றிய ஒரு சர்டிபி கேட்டை, கிராமப் பஞ்சாயத்துத் தொகு நிதிப்பேரேட் டில் கண்டுள்ள கணக்குக்கும், கஜானுப் பாஸ் புத்தகத் தில் உள்ள கணக்குக்கும் சரியாக இருக்கிறதா என்று ஒத்திட்டுப்பார்த்தபிறகு, கமிஷனருக்கு அனுப்பவேண்டும். வருடாந்திர கணக்குடன் இந்த சர்டிபிகேட் சேர்த்து வைத்துக்கொள்ளப்படும்.

> "உலக அநுபவம் என்ற உரைகல்லில் உரைத்து உங்களுடைய கொள்கையை உருவாக்கிக் கொள் ளுங்கள். ஒற்றுமை உணர்ச்சியை வளர்த்து, தனிப் பட்ட வாழ்விலும் சரி, பொது வாழ்விலும் சரி, மேம் பாடான ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, நற்பண்பின் தூய்மை கெடாமல் வாழ்வோம். இப்படி நம் வாழ்க்கையை வகுத்துக் கொண்டோமேயானுல், எந்த இந்தியனும், பொருளாதாரத் துறையில், இந்த நாட்டின் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று அச்சப்படவே தேவையில்லை.
>
> —டாக்டர் எம். விசுவேஸ்வரய்யா.

XII. V.P.C. படிவம் எண் நெ. 11–ல், அந்தந்த தினத்தில் கிடைக்கப்பெறுகின்ற செலுத்தும் சீட்டுகள், ரசீது சீட்டுகளிலிருந்து கிராமப் பஞ்சாயத்துத் தொகுநிதி பற்றிய அன்றுட நிதிக்கணக்கு வரவு செலவுகள் பற்றிய தினசரி அறிக்கையை ஒவ்வொருநாளும் கணக்கர் தயாரிக்கவேண்டும். அடுத்த வேலைத்தினத்தில், மாவட்ட உள்ளாட்சிக் கணக்கு இன்ஸ்பெக்டருக்கு இந்த அறிக்கைகள் அனுப்பப்படவேண்டும். நிதி கணக்கு வரவு செலவுகள் ஏதும் ஒரு தினத்தில் நடைபெறவில்லை யென்றுலும், ஒன்றுமில்லை என்று சொல்கிற ஒரு அறிக்கையும் அனுப்பப்படவேண்டும். அறிக்கையின் அடியில் மானேஜர், கணக்கர் ஆகியோரின் கையொப்பம் இட்ட சர்டிபிகேட் இருக்கவேண்டும். V. P. C. படிவம் எண். நெ 12-ல் கிராமப் பஞ்சாயத்துத்தொகு நிதி பற்றிய ஒரு தினசரி ரொக்க மிச்சத்தைப்பற்றிய அறிக்கையை ஒவ்வொருநாள் முடிவிலும் பொக்கிஷதார் தயார் செய்யவேண்டும. இந்த தினசரி அறிக்கையில் மேனேஜர், பொக்கிஷதார் ஆகியோரின் கையொப்பங்கள் இடப்பட்டு, அடுத்த வேலைதினத்தில், மாவட்ட உள்ளாட்சி நிதிக்கணக்கு இன்ஸ்பெக்டருக்கு தினசரி அனுப்பப் படவேண்டும். அப்படிவருகின்ற மிச்சத் தொகையானது, ரொக்கப் புத்தகத்தில் கண்டுள்ள தொகையுடன் ஒத்துப் போகவேண்டும். ஒவ்வொருநாள் ரொக்க மிச்சமும் மானேஜரால் தணிக்கை செய்யப்பட்டு அப்படிச் செய்த விவரத்தை ரொக்கப்புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும்.

XIII. ஒவ்வொரு வாரமும், குறிப்பிட்ட படிவத்தில், தனிப்பட்ட வைப்புக்கணக்கு பற்றிய வரவுசெலவு பற்றிய நடவடிக்கைகளின் தொகுப்பை உதவி-கஜானு ஆபிசர் தயாரித்து, அதை மாவட்ட உள்ளாட்சி நிதிக்கணக்கு இன்ஸ்பெக்டருக்கு அனுப்பிவைக்கவேண்டும்,

கலந்து பேசுவோம் :

'கிராம நலம்'—ஐந்தாண்டு நிறைவு விழா

(ஆசிரியர் கடிதம்)

அன்புள்ள வாசகர்களுக்கு,

1955-ஆம் ஆண்டு காந்தி ஜயந்தி நன்னாளில் "கிராம நலம்" தோன்றியது. அந்தப் புனிதமான தினத்தில் பிரதமர் நேரு அவர்கள் கையால் "கிராம நலத்" தின் முதல் இதழை வெளியிட்டு ஆசிகூறும் பெரும் பாக்கியத்தையும், நம் பத்திரிகை அடைந்தது. அப்போது சென்னை மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் சிறந்த சேவை புரிந்ததற்காக, பிரதமரின் பரிசு பெற்ற கிராமத் தலைவர்கள் முன்னிலையில், முதல் அமைச்சர் திரு. காமராஜ், விவசாய அமைச்சர் திரு. பக்தவத்ஸலம், நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் ஆகியோரின் வாழ்த்துக்களோடு "கிராம நலம்" கிராம மக்களுக்காகத் தொண்டாற்றத் தொடங்கியது.

அன்று தொடங்கி இன்றுவரை, ஐந்தாண்டுகளாக, "கிராம நலம்" மாதந்தோறும் தவறாமல் வெளிவந்துள்ளது. சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் முதலிய துறைகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிறைவேற்றப்படும் காரியங்களை மக்கள் எல்லோரும் அறிந்து மகிழ்வதற்காகவும், புத்துணர்ச்சி பெற்று புதிய வேகத்தோடு முன்னேறுவதற்காகவும், "கிராம நலம்" தன்னாலான சேவையைச் செய்து வந்திருப்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

இன்றைய தினம் இப்பத்திரிகையின் எண்ணிக்கை ஒன்றுக்கு ஐந்தாகப் பெருகி இருப்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். இதற்கு முக்கிய காரணம், புதியப் பஞ்சாயத்துச் சட்டத்தினால் நாட்டிலே ஏற்பட்டுள்ள புதிய விழிப்புணர்ச்சியும் புத்தார்வமும்தான் என்று கூறலாம்.

பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தும் முறையில், புதிய ஆட்சி அமைப்பு வகுக்கப்பட்டுள்ளது. அதாவது கிராமப் பஞ்சாயத்தின் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றத்திலும் அங்கம் வகிப்பார். எனவே, கிராம அபிவிருத்தியின் எல்லாப் பொறுப்புக்களும் அவர்கள் தலைமையில் நடைபெறுவதோடு, பஞ்சாயத்து யூனியன் மன்றத்திலே, கிராமங்களின் தேவைகளை வலியுறுத்தும் வாய்ப்பும் ஏற்படும்.

இனிமேல், கிராம அபிவிருத்தித் திட்டங்களெல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் ஆகியவைகளே பொறுப்பேற்று நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. 1958-ஆம் ஆண்டு நிறைவேறிய புதியப் பஞ்சாயத்துச் சட்டம், இதற்கான ஏற்பாடுகளை விரிவாக விளக்கியிருக்கிறது.

"கிராம நலத்தின்" தலையாய பணி

"கிராம நலம்" முழுக்க முழுக்க கிராம மக்களின் பத்திரிகை. புதியப் பஞ்சாயத்து ஆட்சி முறையை, கிராம மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையிலும், புதிய கிராம அரசியல் அமைப்பு முறையின் அம்சங்களை கிராம மக்களின் முன்னே எடுத்து வைக்கவும், அது சம்பந்தமான கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வசதி செய்யும் கருத்தரங்கு மேடையாகவும், "கிராம நலம்" பணியாற்றும். அரசாங்கத்தின் அன்றாட வேலை முறைகளுக்கு விளக்கம் தருவது அளிப்பது அல்ல "கிராமநலத்" தின் முக்கிய நோக்கம். சில சந்தர்ப்பங்களில், பஞ்சாயத்து ஆட்சி சம்பந்தமாக வெளியிடப்படும் அரசாங்க ஆணைகள், அமைச்சர்கள் பேசும் பேச்சுக்கள் அவ்வப்பொழுது கிராமநலத்தில் "பஞ்சாயத்து ஆட்சிமுறை" பற்றி அறிவொளி பரப்பும் பகுதியாக வெளியிடப்படலாம். கிராம மக்கள், அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு இந்தப் பத்திரிகையை பெருவாரியானமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வெகுவாக ஆசைப்படுகிறோம். கிராம அபிவிருத்தி சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுதியனுப்பினால், "கிராம நலத்தில்" வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும். ஆனால் அனுப்பப்படும் கட்டுரைகள் உண்மைக்குப் புறம்பான முறையில் இல்லாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது, மிகவும் முக்கியம்.

கற்பனையாகப் புனையப்படும் கதைகள், நாடகங்கள், பாடல்களும் வரவேற்கப்படுகின்றன. அவை அத்தனையும் கிராம நலம், பஞ்சாயத்து சம்பந்தமான விஷயங்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டுகிறோம். குறிப்பாகக் கிராமியப் பாடல்களையும், அவை பற்றிய கட்டுரைகளையும் அன்பர்கள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். "கிராமியப் பாடல்கள்" "கிராம நலத்தில்" அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகின்றன. "கிராம நலத்தை" மேன்மேலும் கிராம மக்களுக்குப் பலன் உள்ளதாகச் செய்ய எல்லோருடைய ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

உரிமைப் பயிரை கண்ணும் கருத்துமாய் காப்போம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் நெஞ்சிலிருத்திக்கொள்ள வேண்டியது, ஒன்றுள்ளது. தியாகத் தீயிலே புடம் போட்டு எடுத்த எண்ணற்ற தியாகச் செம்மல்களின் உழைப்பினால் உருவாகியது, நமது சுதந்திரப் பயிர். 'ஒற்றுமை' என்னும் உரமிட்டு, அதைச் செழிக்கச் செய்ய வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும். ஜனநாயக வேலியிட்டு, 'உரிமைப் பயிரை, கண்ணும் கருத்துமாய், காப்பாற்ற வேண்டும். அப்போதுதான் சுயராஜ்யம் மூலம், 'சுக வாழ்வு' என்ற விளைச்சலை—பயனை—மக்கள் எல்லோரும் பெற முடியும்.

இந்த மகத்தான லட்சியத்தை, காந்தியடிகள் கண்ட கனவை-நனவாக்குவதே புதியப் பஞ்சாயத்து ஆட்சி. முன்னேற்றப் பாதையில், லட்சியப் பயணத்தைத் தொடங்கியிருக்கும் நாம், பஞ்சாயத்து என்ற தூண்டா மணி விளக்கின் துணை கொண்டு செயலாற்றுவோமாக ! பஞ்சாயத்து ஆட்சி வளர்க ! வாழ்க ! வணக்கம்.

—ஆசிரியர்,
"கிராம நலம்"

> **நம்முடைய பிரச்னைகளைச் சமாளிக்க....**
>
> பழங்காலத்திலும், நம்மிடையே கிராமப் பஞ்சாயத்துக்கள் இருந்தன. ஆனால், கிராமத்தில் செயலாற்றும் புதிய பஞ்சாயத்துக்கள், அமைப்பு முறையில், நாட்டின் பாராளுமன்றம் வரையில் இணைக்கப்பட்டிருக்கும் இப்போதைய அரசியல் நிர்வாகமுறை, நமது சரித்திரத்திலேயே இதற்குமுன் இருந்தது கிடையாது. ஆகவே, இதை அமுலுக்குக் கொண்டு வரும்பொழுது பல சிக்கல்கள் ஏற்படலாம். அரசாங்க அலுவலகங்களில் உட்கார்ந்துகொண்டு, இந்தப் பிரச்னைகளைத் தீர்த்துவிடமுடியாது. கிராம மக்களின் பிரதிநிதிகளைக் கூட்டவேண்டும். பிரச்னைகளை அவர்கள் ஒரு பொது மேடையில் விவாதித்து, அரசாங்க உதவியுடன், நிறைவேற்ற வேண்டும். எப்பொழுது நாம் இந்த அறிவுச் சக்திகளையெல்லாம் திரட்டுகிறோமோ, அப்பொழுது தான் நம்முடைய புதியப் பிரச்னைகளுக்கு, நம்மால் பரிகாரம் காண முடியும்."
>
> எஸ். கே. டே,
> மத்திய அரசாங்க சமுதாய நல, கூட்டுறவுத்துறை அமைச்சர்.

கிராம நலமதை உயர்த்திடுவோம்

கவிஞர் சு. மு. சொக்கலிங்கன்

கிராம நலமதை உயர்த்திடுவோம்—நாம்
கீழ்மை குணங்களைப் போக்கிடுவோம்;

கிராம ராஜ்யத்தைக் கண்டிடுவோம்—நாம்
இணையில்லா அன்பதனைக் கொண்டிடுவோம்.

ஒற்றுமை வழியினிலே நின்றிடுவோம்—நாம்
ஒன்று குலம், ஒன்று இனம் என்றிடுவோம்;

வெற்றுரைகள் தம்மையே நாம் போக்கிடுவோம்—இங்கு
வியர்வை சிந்தசிந்த உழைத்திடுவோம்.

சோம்பல் சிறிது மின்றிநாம் உழைத்தால்—இங்கு
சோற்று, உடைப் பஞ்சம் தோன்றிடுமோ;

தேம்பித் திகைத்திடும் சிறுமையது—நம்
தேசத்தில் நின்றுவ ருத்திடுமோ.

புதுப்புதுக் கருவிகள் தன்னைக் கொண்டு—நாம்
போராக நெல்லைக் குவித்திடுவோம்;

விதவிதமாய் விதைகள் கொண்டு—நாம்
விவசாயத்தில் வெற்றி கண்டிடுவோம்.

கால்நடை நலத்தைப் பேணிடுவோம்—நம்
கருத்தை அதனிலே செலுத்திடுவோம்;

பால்வளம் தன்னைப் பெருக்கிடுவோம்—இந்த
பாரகம் வாழ்த்தவே வாழ்ந்திடுவோம்.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Development Commissioner, Government of Madras.



சென்னை ராஜாஜி ஹாலில் செப்டம்பர் 5, 6 தேதிகளில் கலெக்டர்கள் மகாநாடு நடைபெற்றது.



கூட்டுறவு ஆலோசனைக்குழுவின் கூட்டம் செய்ண்ட் ஜார்ஜ் கோட்டையில் 3—9—60ல் தொழில் துறை அமைச்சர் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



Regd. No. M. 7277

©
GOVERNMENT OF MADR
1960





சென்னையில் குடியரசுத் தலைவர்

6-8-60-ல் சென்ட்ரல ஸ்டேஷனில் வரவேற்பு.

மவுண்ட் ரோடில் குடியரசுத் தலைவரின் பவனி.

ஐலண்டு மைதானத்தில் சுதந்திர தின அணி வகுப்பு.